பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 8 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 11 27-09-94 செவ்வாய்க்கிழமை ஓசை 221

## வறுமை ஒழிப்பு திட்டம் அமுலாக்க 35 ஆயிரம் பேர் நியமனமாவர்

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புத்திட்டத்தை அமுல்படுத்த சுமார் முப்பத்தி ஐயாயிரம் பேர் புதிதாக வேலைக்கு அமர்த்தப்பட இருப்பதாக திட்ட அமுலாக்க அமைச்சு தெரிவித்துள்ளது- இவர்கள் வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கடமையாற்றுவர் என்றும் 2000 ரூபாவுக்கும், 2500 ரூபாவுக்கும் இடைப்பட்ட தொகை வழங்கப்பட இருப்பதாகவும் அவ் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது- இதற்கென வேலையற்றிருக்கும் பெருமளவு இளைஞர்கள் திரட்டப்படுவர்-

## பிரபாகரன் திறமை மிக்க ஒரு உண்மையான தலைவர்

### தமிழோசை செய்தித் தயாரிப்பாளர் பி.பி.ஸி க்கு பேட்டி



(லண்டன்)

அரசுடன் சமாதானப் பேச்சு நடத்துவது என பிரபாகரனே முடிவெடுத்தார்- அவர் யாராலும் வழிநடத்தப்பட்டு சமாதானப் பேச்சிற்கு சம்மதிக்கவில்லை- திறமைமிக்க தலைவர் அவர் அந்துடன் யதார்த்தமிக்கவர்- அவர் ஒரு உண்மையான தலைவர்- அவரே அரசுடன் சமாதானப் பேச்சை ஆரம்பிப்பது என முடிவு செய்தார்- இவ்வாறு பி பி ஸி தமிழ் சேவை தயாரிப்பாளர் திருமதி ஆனந்தி சூரியப்பிரகாசம் பி பி ஸியின் கார்ள் ஜோசப்பிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்-

விடுதலைப் புலிகளின் தலைவர் அரசுடன் சமாதானப் பேச்சு நடத்த இணங்கியதற்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் ஏற்படும் வரை ராணுவத்தினர் தாக்குதலைதொடர்வர்

### இராணுவ பேச்சாளர் கெமுனு குலதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

'யுத்த நிறுத்தம் ஒன்று உத்தியோகபூர்வமாக நடைமுறைப் படுத்தும்வரை இராணுவத்தினர் தங்களது தாக்குதல்களை நிறுத்திக் கொள்வார்கள் என்பது எதிர்பார்க்க இயலாத ஒன்று என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்துள்ளார்-

பி-பி-சி சிங்கள சேவைக்கு பேட்டியளித்த அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்த நிறுத்தத்திற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசும், உயரதிகாரிகளும் தவிர இராணுவத்தினரல்ல அரசு யுத்த நிறுத்தம் அறிவித்தால் அதற்கமைய நடப்பதுதான் இராணுவத்தின் பணியாகும் என அவர் தெரிவித்தார்-

சிறிலங்கா படையினர் நேற்று முன் தினம் மேற்கொண்ட ஜெயசுந்த இராணுவ நடவடிக்கை பற்றி குறிப்பிட்ட அவர், மேற்படி நடவடிக்கை புலிகளின் தாக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபனுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி; வட தமிழீழம் எங்கும் எழுச்சிகர நிகழ்வுகள்

## பெருமளவு மக்கள் நிகழ்வுகளில் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7 ம் ஆண்டு நினைவு நாட்களின் இறுதி நாள் நினைவு நிகழ்வுகள் குடாநாடெங்கும் நேற்றைய தினம் உணர்வு எழுச்சியுடன் கொண்டாடப்பட்டன பெருந்திரளான மக்கள் இந் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்டு தியாகி திலீபனுக்கு தங்கள் அஞ்சலியை செலுத்தினர்.

கோட்ட ரீதியாக குடாநாடளாவிய ரீதியில், உண்ணாவிரத பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன காலை 7 மணியளவில் ஈகச்சுடரேற்றலுடன் ஆரம்பமான அடையாள உண்ணாவிரதத்துடன் நேற்றைய நிகழ்வுகள் ஆரம்பமாகின உண்ணாவிரத பந்தல்களில் தியாகி திலீபனின், தற்கொடையை நினைவு கூரும் கலைநிகழ்வுகள் தொடர்ந்து இடம் பெற்றவண்ணமிருந்தன.

அடையாள உண்ணாவிர

(5 ஆம பக்கம் பார்க்க)

## தமிழீழ விடுதலை போராட்டம் தொடர்பான

## புலிகளின் விசேட தாக்குதல் அணி கொழும்பு நகரில் ஊடுருவல்

### பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் விசேட தாக்குதல் அணியொன்று கொழும்பில் ஊடுருவி இருப்பதாகவும் இவர்கள் எந்த நேரமும் எங்கும் தாக்குதல் நடத்த தயாரான நிலையில் இருப்பதாக

சுமார் பத்துக்கும் பதினைந்துக்கும் இடைப்பட்ட அங்கத்தவர்கள் இவ் அணியில்இடம் பெற்றுள்ளதாகவும் இவர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறும் சகல பொலிசாருக்கும் அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## சிறிலங்கா விமானம்

# தமிழீழ விடுதலை போராட்டம் தொடர்பான வெளியுறவு கொள்கையை மாற்றி அமையுங்கள்

## இந்தியாவிற்கு காவல்துறை பொறுப்பாளர் நடேசன் அறிவுறுத்து

''உங்கள் (இந்தியா) கொள்கைஅமெரிக்க வல்லாதிக்கத்துடன் எல்லாறு தலைகீழாக மாற்றப்பட்டதோ அதேபோன்று எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் உங்கள் கொள்கையை மாற்றி எமது போராட்டத்தையும், எமது மக்களின் அபிலாசைகளையும் நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். நீங்கள் அங்கீகரிக்கும்பொழுதுதான் உங்கள் வெளியுறவு கொள்கை வெற்றியளிக்கும். அல்லாவிட்டால் உங்கள் வெளியுறவு கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளிடம் தியாக உணர்வு தோன்ற வழிகாட்டியாக நின்றவர் தியாகி திலீபன்

- வே. பாலகுமாரன்

(தென்மராட்சி)

திலீபனின் வழியில் இன்று எத்தனை கரும்புலிகள் நடந்துள்ளனர். இம்மாதிரியான ஈக உணர்வு தியாக உணர்வு தோன்ற திலீபனின் தியாகமே காரணமானது எனவே இன்றைய காலகட்டத்தை நாம் திலீபனின் காலகட்டம் என வரலாற்றில் எழுத முடியும். அந்த காலகட்டம் இன்னும் தொடர்கிறது. அது முடிவடைந்துவிடவில்லை. இன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபன் நினைவாக தூக்கு காவடி, தேர் பவனி

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின், 7-ம் ஆண்டு நினைவு தினங்களில், இறுதி தினமான நேற்று யாழ்- குடாநாடெங்கும், தமிழரின் பாரம்பரிய கலையம்சங்களோடு கூடிய பல நிகழ்வுகள் இடம்பெற்றன-

[6ஆம் பக்கம் பார்க்க]

# யாழ், கோட்டையில் தேசியக்கொடி ஏற்றிவைப்பு

தியாகி லெப்- கேணல் திலீபன் வீரச்சாவடைந்தநினைவு தினமான நேற்று முற்பகல் 10-48மணிக்குயாழ். கோட்டையில்தமிழீழதேசியக்கொடி ஏற்றப்பட்டது யாழ்-மாவட்ட அரசியல்துறைபொறுப்பாளர் இளம்பரிதி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்- பெருமளவிலான விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளும், மக்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்- கோட்டை சுற்றாடல் பகுதி சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தியாகி லெப்- கேணல் திலீபன் வீரச்சாவடைந்த மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தில் யாழ்- கோட்டை புலிகளால் கைப்பற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது-

# இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

தாக்குதல் நடத்த தயாரான நிலையில் இருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# தெஹிவளையில் குண்டு தாக்குதல்

(கொழும்பு)

இனந்தெரியாத ஆயுதக் குழுவினர் நேற்று மாலை தெஹிவளையில் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளனர். இக்குழுவினர் இருவரை கடத்திச்செல்ல முயன்றபோது குண்டு ஒன்று வெடித்தது- இதனால் அவ்விருவரும் காயமடைந்ததாகவும் இவர்கள் கலுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

இச்சம்பவத்தில் சில கடை

[6ஆம் பக்கம் பார்க்க]

# சிறிலங்கா விமானம் வீழ்ந்து நொருங்கியது

## விமான ஓட்டிகள் இருவர் பலி

(கொழும்பு)

சிறிலங்கா விமானம் ஒன்று நாத்தாண்டிய பகுதி வயலில் நேற்று முன்தினம் விழுந்து நொருங்கியது.

இரத்மலானை விமான நிலையத்தில் அன்று காலை 10. 30 மணிக்கு புறப்பட்ட இவ் விமானம் நாத்தாண்டிய

[6ஆம் பக்கம் பார்க்க]


# அச்சுவேலி பகுதியில் ''ஜெயகந்த'' நடவடிக்கை

## 23 படையினர் காயம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் பலாலி முகாமிலிருந்து இடைக்காடு, அச்சுவேலிப் பகுதிகளில் இராணுவத்தினர் ஜெயகந்த என்னும் பெயரில் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்

[6ஆம் பக்கம் பார்க்க]



நல்லூரில் நேற்று தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்த மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை முதலாவது படத்திலும், தூக்குக்காவடி எடுத்து வந்த இளைஞர்கள் தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்

## வரி விளம்பரம்


### ஆனந்தம் தயாரிப்புகள்

சத்-சித் ஆனந்தம்- சத்தாக இருக்கும் உண்மைப்பொருளை எமது சித்தத்தால் அறிந்தால் கிடைப்பது எமக்குப் பேரானந்தம். அதே போல ஆனந்தம் சீயாக்காய் பவுடர், ஆனந்தம் அம்மாமி அப்பளம் பாவித்தால் ஆனந்தம் அடைவீர்கள். கேட்டு வாங்குங்கள் ஆனந்தம், (சி-10289)

### வியாழ மாற்றம்

விற்பனையாகிறது! எல்லா இராசிகளுக்கும் ஒரே பிரதியில் பலனறிய ரூபா பத்து மட்டுமே. வேலணை சோதிடர் V. A. சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம். [9518]

### விற்பனைக்குண்டு

திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி லிங்கா - துரைராஜா சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், 19 பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர். (9951)


# கைதிகள் தப்பிச்சென்றதால் கான்ஸ்டபிளுக்கு தண்டனை

(கொழும்பு)

அடிதடிச் சம்பவமொன்றில் கைதான இரு சண்டியர்களிடம் ஏமாந்து அவர்களைக் கோட்டைவிட்ட பொலிஸ் ஒருவருக்கு விசித்திரமான தண்டனை கிடைத்துள்ளது. இச் சம்பவம் தென்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையமொன்றில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சண்டியர்கள் இருவரையும் ஒருவர் பிடித்து பொலிஸ் நிலையமொன்றில் ஒப்படைத்தார். இருவரையும் பொறுப்பேற்றுக்கொண்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இவர்கள் மீதான விசாரணை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் அதுவரை இவர்களைப்பத்திரமாக பாதுகாக்குமாறும் கூறி ஒரு கான்ஸ்டபிளிடம் இவர்களை ஒப்படைத்து விட்டுச் சென்றார்.

சிறிது நேரம் செல்ல சண்டியர்களில் ஒருவர் தான் முன்னால் இருக்கும் தேநீர்க்கடையில் தேநீர் அருந்திவிட்டு வர தன்னை அனுமதிக்குமாறு வேண்டினார். அவரது கோரிக்கை கான்ஸ்டபிளினால் நிராகரிக்கப்பட்டது. சிறிது நேரம் செல்ல மீண்டும் அவர் "ஐயா, நான் கடைக்குப் போய் தேநீர் அருந்திவிட்டு வர அனுமதியுங்கள். நான் தேநீர் அருந்திவிட்டு உங்களுக்கும் ஒரு தேநீரும், சிகரெட்டும் வாங்கி வருகிறேன்" என்றார்.

அதற்கு சம்மதித்த கான்ஸ்டபிள் அவரைச் செல்ல அனுமதித்தார். அத்துடன் விரைவாக வரவேண்டுமெனவும் அறிவுறுத்தல் வழங்கினார். இதற்கிணங்க வெளியே சென்ற சண்டியன் திரும்பி வரவேயில்லை.

சிறிது நேரம் செல்ல மற்றைய சண்டியன் "ஐயா அவன் மிகவும் பொல்லாதவன். நான் போய் அவனுக்கு நாலு அடிகொடுத்து இழுத்து வருகிறேன். என்னை வெளியே விடுங்கள்" என்றாராம். இதற்கு சம்மதித்த கான்ஸ்டபிள் அவரையும் வெளியில் விட்டார். சிறிது நேரம் செல்லத்தான் இருவரும் தன்னை ஏமாற்றி விட்டுச் சென்றுவிட்டனர் என்ற உண்மை கான்ஸ்டபிளுக்கு தெரிய வந்தது.

பிற்பகல் 4 மணியளவில் அங்கு வந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேற்குறித்த கைதிகள் இருவரையும் கூட்டி வருமாறு கான்ஸ்டபிளை வேண்டவே அவர் தான் ஏமாந்த கதையைச் சொன்னார். அதற்கு அவர் கான்ஸ்டபிளை சீருடையைக் கழற்றி சாதாரண உடையில் வருமாறு கூறவே தப்பிப்போன குற்றவாளிகளைப் பிடிக்க ஏதோ உபாயம் சொல்லப் போகின்றாரென நினைத்த கான்ஸ்டபிள் சாரம் சேட்டுடன் அவர்முன் வந்தார். உடனே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவரை கைதிகளின் கூட்டில் அடைத்துவிட்டு ", தப்பிப்போன இருவரும் கைதாகி வரும்வரை உள்ளேயே இரும்" எனக் கூறிவிட்டுச் சென்றாராம்.

# குடிநீர்திட்டம் விரிவாக்க மாநகரசபை ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

மாநகர சபையின் குடிநீர் விநியோகப் பகுதியை மறுசீரமைப்பதற்கும் விரிவுபடுத்துவதற்குமான ஒரு தொகுதி பைப்புகளும் மற்றும் சில பொருட்களும் யாழ்மாநகர சபைக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

எனவே இவற்றைக் கொண்டு குடிநீர் விநியோகப் பகுதியைமறுசீரமைத்து விரிவுபடுத்துவதற்கான வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. [பா]


## விற்பனைக்குண்டு

பளை கண்டி வீதியில் வைத்தியசாலைக்கண்மையிலுள்ள தென்னை,பனை மரங்களுடன் கூடிய குடியிருக்கக் கூடிய 20 பரப்புக் காணியும் பெரிய பளை மத்திய வீதியிலுள்ள 4 பரப்பு குடியிருக்கக் கூடிய தென்னை மரங்களுடன் கூடிய காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- தா. சுவாமிநாதன்
பெரியபளை, பளை. (9521)


# புதிய கட்சியொன்றை அமைப்பதென ஜ. ஐ. தே. மு. லலித் பிரிவு முடிவு

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தமது அடிப்படை உரிமைகளை கௌரவிக்காத நிலையில் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்க இருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் (லலித் பிரிவு) அறிவித்துள்ளது.

இவ் அணியின் தலைவரும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் சுற்றுப்புற சூழல் அமைச்சருமான திருமதி சிறிமானி அத்துலத்முதலி தலைமையில் இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டத்தில் இக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவும், டி. யு என் எப்பின் மற்றுமொரு பிரிவான ஜி.எம். பிரேமச்சந்திரா அணி மீது வழக்கு தாக்கல் செய்வது பற்றி ஆராயவும் குழுக்கள் நியமிக்கப்பட்டன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவை வழங்கும் அதே சமயத்தில் தனது தனித்துவத்தைக் காக்க வேண்டும் எனவும் நாட்டில் ஒரு அரசியல் சக்தியாக எதிர்காலத்தில் மிளிர வேண்டும் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

# சுற்றாடல் கண்காணிப்புக்கு ஆய்வுமையம் அமையும்

(கொழும்பு)

கைத்தொழில் அபிவிருத்தியினால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் முகமாக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முதலீட்டுச் சபை எடுத்துள்ளது.

ஏற்றுமதி வலயங்களில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கும், அனுமதிப் பத்திரம் பெற்ற தொழிற்சாலைகளுக்கும் இது பொருந்தும்.

மேலும் சுற்றாடல் கண்காணிப்புக்கான ஆய்வு மையம் ஒன்றைஏற்றுமதி அபிவிருத்திச் சபை நிர்மாணித்துள்ளது. சகல திட்ட யோசனைகள் தொடர்பாகம் சுற்றாடல் தாக்க மதிப்பீடுகள் ஆராயப்படுகின்றன. சுற்றாடல் பாதிப்பு அவதானிக்கப்படுமாயின் அது தொடர்பான பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரவு நேர மீன்பிடிக்கு மன்னார் கடலில் தடை

[மன்னார்]

மன்னார் கடற்பகுதியில் இரவு நேரத்தில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கும் உத்தேசம் தற்போது கைவிடப்பட்டுள்ளது,

கடந்த 19-ம் திகதி இரவு மன்னார் கடலில் விடுதலைப் புலிகளால் சிறிலங்கா கடற்படையின் போர்க்கப்பலான சாகரவர்த்தனா மூழ்கடிக்கப்பட்டதைத்தொடர்ந்து இரவு நேரத்தில் மீன்பிடிப்பதற்கான அனுமதி நிலைமை சீரடையும் வரை வழங்கப்படமாட்டாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார்

இரவில் மீன்பிடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்குவது குறித்துகடற்படையினர்ஏற்கனவே தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர் கடற்படையினர் விடுதலைப்புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சமே அதற்கு காரணம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது இதனைத் தொடர்ந்து கடந்த வியாழன் மாலை பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றமாநாட்டில் இவ்விடயமும் ஆராயப்பட்டதுநிலைமைசீரடையும்வரை மன்னார் கடலில் இரவு நேர மீன்பிடித்தொழிலை அனுமதிப்பதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டது

# பால்குளிரூட்டிகளை இயங்க வைக்க முயற்சி

[யாழ்ப்பாணம்]

மின்சார வசதியின்மையால் பாலை சேமித்துவைக்கமுடியவில்லை, இதனால் பால் குளிரூட்டி இயந்திரங்களை மீண்டும் செயல்பட வைப்பதற்காக மின் பிறப்பாக்கி ஒன்றை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

யாழ். அரச அதிபரின் ஊடாக இந்த மின் பிறப்பாக்கியை கப்பல் மூலம் எடுத்து வருவதற்கு முயற்சி செய்யப்படுகிறது.

மின் பிறப்பாக்கி வந்து சேர்ந்ததும் மேற்படி சங்கத்திடம் உள்ள 2 குளிரூட்டிகளையும் இயங்கச் செய்யமுடியும் இதன் மூலம் மூவாயிரம் லீற்றர் பாலை சேமித்து வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [88]

## விதைநெல் பெற சமாசம் முயற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டத்திற்கு விதைநெல் தருவிக்க விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முயற்சி எடுத்துள்ளது,

யாழ் மாவட்டத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளின் நன்மை கருதி மூன்றரைமாத நெல்லும் நான்கு மாத நெல்லும் தருவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

இம்முறைபரீட்சார்த்தமாக BG 300 வெள்ளை அரிசி நெல்லும் தருவிக்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது-

# இரு குடும்பப் பெண்கள் தொடர் உண்ணாவிரதம்

(வடமராட்சி)

வடமராட்சிக்கோட்டத்தில் தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நிறைவு நாள் உண்ணாவிரதத்தின் போது இரண்டு குடும்பப் பெண்கள் மூன்று நாள் தொடர் உண்ணாவிரதமிருந்துநேற்று மாலி சந்தி பிரதான பந்தலில் நோன்பை நிறைவு செய்தனர்

உடுப்பிட்டி வட்டப்பந்தலில் கடந்த சனிக்கிழமை தமது உண்ணாவிரதத்தை இருவரும் ஆரம்பித்தனர். உடுப்பிட்டியைச்சேர்ந்தவர்களான சினித்தம்பி புவனேஸ்வரி, இரத்தினம் சின்னத்தங்கம் ஆகியோரே நேற்று நோன்பை நிறைவுசெய்தவர்களாவர்.

சின்னத்தம்பி புவனேஸ்வரி நீர் ஆகாரம் எதுவுமின்றி மூன்றுநாள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார். இரத்தினம் சின்னத்தங்கம் என்ற பெண்மணி ஒருவேளை நீராகாரம் அருந்தி உண்ணாவிரதம் இருந்தார். (யோ)

## செப்ரிசீமியாவால் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்தியசாலையில் செப்ரிசீமியா நோயினால் குழந்தையொன்று மரணமடைந்துள்ளது.

சிவராசா தர்சிகன் [வயது ஒன்று] என்பரே மரணமானவராவார்.

இத்துடன் ஒரு வாரத்தில் செட்ரிசீமியா நோயினால் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது (88 நி)

## திலீபன் நினைவாக சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

தியாகி லெப்- கேணல் திலீபனின் 7- ம் ஆண்டு நினைவையொட்டி நவாலி மயூரன் குடியிருப்பில் 25 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை குடியிருப்பு மக்களால் சிரமதானம்மேற்கொள்ளப்பட்டது- மலசலகூடங்கள் செப்பனிடப்பட்டும் குடியிருப்பின்சுற்றுப்புறங்கள்சுத்தமாக்கப்பட்டும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன: 26-ம் திகதி திங்கட்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் நண்பகல் 11-00 மணிவரை அரியாலை சிந்து பாத்தி இந்து மயானத்தில் சிரமதான வேலைகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது. [88]

## நினைவு கூருகின்றோம்...

27. 09. 1994

கொழும்பு செல்லும்

### கவனத்திற்கு

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச்செல்பவர்களையும், இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் அன்று காலை 7-00 மணியளவில் யாழ். பொது வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுக் கொள்ளுகின்றார்.

### போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு

300 கிராம் ஹேறோயின் போதைப்பொருட்களை கடத்தி வந்த ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில்கைது செய்யப்பட்டார். இதன் பெறுமதி சுமார் ஆறுலட்சம் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### வட்டு. திருநாவுக்கரசு சாம்பியனாகத் தெரிவு

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான 17 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் கோட்டமட்டத்தில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டு சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இவ்வித்தியாலயம் வட்டு இந்துக்கல்லூரி அணியோடு விளையாடி 3-2 பனால்டி கோல் கணக்கிலும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியோடு விளையாடி 2-0 கோல்கணக்கிலும் வெற்றியீட்டி, இறுதியில் அராலி இந்துக் கல்லூரி அணியோடு விளையாடி 1-0 கோல்கணக்கில் வென்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# 8ஆம் நாள் நினைவஞ்சலி



லெப். கேணல் நளாயினி

19-09-94 அன்று கற்பிட்டிக் கடற்பரப்பில் கடற்படைக் கப்பலைத் தகர்த்து வீர சாதனை படைத்த கடற் கரும்புலிகளான

## லெப். கேணல் நளாயினி

## மேஜர் மங்கை



மேஜர் மங்கை



கப்டன் லக்ஸ்மன்

## கப்டன் லக்ஸ்மன்

## கப்டன் வாமன்

ஆகிய கடற் கரும்புலி வீரர்களுக்கு எமது அஞ்சலிகள்

வலிகாமம் கிழக்கு கடற்தொழிலாளர் ஒன்றியத்திற்கு உட்பட்ட



கப்டன் வாமன்

பாஷையூர் புனித அந்தோனியார் கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு,
கொழும்புத்துறை கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

(9522)

1986-ம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

★ **ராஜன் -ஜெயம்** (நாகராசா ஜெயராசா - தம்பலகாமம் - திருமலை)

1988-ம் ஆண்டு கணேசபுரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த,

**மோகன்** (சோமசுந்தரம் விமலதாஸ் - ஓமந்தை - வவுனியா)

1990-ம் ஆண்டு திருமலை - மூதூர். வெருகல் பகுதியில் தவறுதலான துப்பாக்கிச்சூட்டில் எமைப் பிரிந்த,

**மது** (அப்புசாமி செல்லத்துரை - ஆலங்கேணி கிண்ணியா - திருமலை)

மாங்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**அருள்** (வேலுப்பிள்ளை சிவகுமாரன் - மருதோடை, நெடுங்கேணி - மணலாறு)

1991-ம் ஆண்டு எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கியதில் எமைப் பிரிந்த,

**சா[illegible]ஸ்** ( - மகாத்மராசா - தாண்டவன் வெளி-மட்டு)

இதே தினம் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த,

**ஈசன்** (சிதம்பரப்பிள்ளை அசோக்குமார் - 155 ம் கட்டை - கிளிநொச்சி)

1992-ம் ஆண்டு ஆனையிறவு கடலேரியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கரிகாலன்** (சிதம்பரநாதன் காண்டீபன் - கற்கோவளம் - பருத்தித்துறை)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10414)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

## கட்சியின் தலைமையை கண்டித்தால் நடவடிக்கை

### ஐ. தே. க. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடைந்தமைக்காக கட்சியை கண்டித்த அக்கட்சி உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என ஐ. தே. க. பொதுச் செயலர் அறிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான சிறிசேன கூரே ஏ. ஜே. ரணசிங்க ஆகியோரும் இவர்களில் அடங்குவர். இவர்கள் கட்சி தேர்தலில் தோல்வியடைந்தமைக்காக கட்சியின் தலைமையை கடுமையாக சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் மீண்டும் சோதனைகள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கில் மீண்டும் தேடுதல்களும் சுற்றிவளைப்புகளும் படையினரால் மேற்கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பின் சில கிராமங்கள் இந்நடவடிக்கைக்குள்ளாகின்றன எனினும் எவரும் கைதாகவில்லை.

கிரானில் படையினர் வீடு வீடாக தேடுதல் நடத்தினர். வீடுகளில் உள்ள மருந்துப் பொருட்கள், குளிகைகள் என்பவற்றை படையினர் பறிமுதல் செய்கின்றனர். வீதியில சோதனைச் சாவடிகளிலும் சோதனை அதிகரித்துள்ளன.

## பிரதேச சபை தலைவர் கொலையில் பெண் தொடர்பு

(கல்குடா)

ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச சபைத்தலைவர் து. ஜெயராஜன் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக பெண்மணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்-

கொலைச் சம்பவம் நடைபெறும்போது பிரதேச சபைத் தலைவருடன் பேசிக்கொண்டிருந்ததாக கூறப்படும் வந்தாறுமூலையைச் சேர்ந்த பெண்மணி பத்மராஜன் டெல்சியா (வயது 19) என்பவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவராவார். இவர் தற்போது பொலிசாரின் விசாரணைக்குட்பட்டுள்ளார்,

## தமிழர் ஏற்கக்கூடிய தீர்வே தேவைப்படுகிறது

### ராவய ஆசிரியர் விக்டர் ஐவன்

(கொழும்பு)

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, தமிழர் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வே தேவை- சிங்களவர் திருப்திப்படும் தீர்வுதான் தேவை என்பது பொருத்தமற்றது- ஏனெனில் பிரச்சினை தமிழருடையதே என பிரபல பத்திரிகையாளர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்-

ரூபவாஹினியில் இடம்பெற்ற வடக்கு-கிழக்கு பிரச்சினையும் தீர்வும் பற்றிய பத்திரிகையாளர் கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்- இக்கலந்துரையாடலில், கலாநிதி சுனந்த மகேந்திர, சுதத் அமுனுல்ல ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யும்- விடுதலைப் புலிகள் இவ்வளவு ஆண்டுகளாக, கெரில்லாப் போராட்டத்தை நடத்தி வருவதற்கும் மக்களின் ஆதரவே காரணமாகும் இதனை மறுக்கமுடியாது-

யுத்தத்துக்கான அரசியல் தீர்வொன்றை காணும் தலைமைத்துவம் இப்போது கிடைத்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்-

## விவசாய கடன் வழங்கத் திட்டம்

சங்கானை ப.நோ.கூ. சங்கம் அராலிப் பகுதி விவசாயிகள் முப்பது பேரிற்கு கடன் வழங்கவுள்ளது-

மேற்படி சங்கம் மக்கள் வங்கியின் உதவியுடன் இந்த கடன்திட்டத்தை நடைமுறை

## பிரிட்டிஷ் விமானப்படை விமானங்கள் கொழும்பில் தரித்துச் சென்றன

(கொழும்பு)

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள கூட்டு இராணுவ பயிற்சியில் கலந்துகொள்ள செல்லும் பிரிட்டிஷ் விமானப் படை விமானங்கள் இவ்வாரம் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து தரித்து சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் ரோயல் விமானப்படையை சேர்ந்த பன்னிரண்டு போர் விமானங்களில் 10 போர் விமானங்கள் ரொனாடோ ரக பல்வழித் தாக்குதல் விமானங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூருக்கு செல்லும் இந்த 10 ரொனாடோ போர்விமானங்களும் இ5 எரிபொருள் டாங்கி விமானங்களும் இவ்வாரம் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து இறங்கின. இவைதற்போதுசிங்கப்பூருக்கு புறப்பட்டு சென்றுவிட்டன.

சிங்கப்பூரில் நடைபெறும் அவுஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து, சிங்கப்பூர் படைகளின் கூட்டு இராணுவ பயிற்சியில் கலந்துகொள்ள இவ்விமானங்கள் பிரிட்டிஷ் தளங்களில் இருந்து சிங்கப்பூர் நோக்கி புறப்பட்டன.

இந்த பிரிட்டிஷ் விமானங்கள் கட்டுநாயக்கா விமானத் தளம் வந்து இறங்கியபோது முன்னாள் ஐ.தே.க அரசு சிறிலங்கா விமானப்படைக்கு கொள்வனவு செய்த விமானங்களே வந்திறங்குவதாக கொழும்பில் செய்திகள் பரவின என்பது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சினை இல்லைஎன எவரும் கூற முடியாது

### காமினி திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை என எவரும் கூற முடியாது நாட்டின் இன்றைய மிகப் பெரிய நெருக்கடியே இனப்பிரச்சினைதான் என எதிர்க்கட்சித்தலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்-

இந்நாடு சகல இனத்தவர்களுக்கும் சொந்தமானது என்ற நிலையை உருவாக்க வேண்டும் ஒரே நாளில் இப்பிரச்சினையை தீர்க்க முடியாது அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் சகல மக்களும் அச்சமின்றி வாழ வழி செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்-

## அரசின் சக்தியை அதிகரிக்க 60 வீத வாக்குகள் தேவை

### - அமைச்சர் விக்கிரமநாயக்கா

(கொழும்பு)

''தேர்தலில் தோல்வியுற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், வெற்றி பெற்ற பொது ஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவைக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் செயலானது எமது நாட்டின் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையையே கேலிக்கூத்து நிகழ்ச்சியாக்கி விட்டது''

இவ்வாறு பொது நிர்வாக உள்ளூராட்சி, தோட்டத் துறை அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா கூறினார். பாணந்துறைப் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் அதில் மேலும் குறிப்

துங்கா மறுத்தால் அவற்றினை அமுல்படுத்துவது கஷ்டமானது ஆகும். இது ஒரு சங்கடமான நிலையாகும். இதற்குத் தீர்வு காணவே நவம்பர் 9-ம் திகதியன்று ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவுள்ளது. அரசின் சக்தியை அதிகரிக்க மக்கள் அறுபது சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரான பிரதமர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவிற்கு வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## கடற்படை தலைமையகம் கவனயீனமாக இருந்தது

### பிரிகேடியர் கெமுனு குலதுங்க

(கொழும்பு)

இலங்கையின் மேற்கு கடலில் கடற்படை கப்பல் விடுதலைப் புலிகளால் தாக்கப்படலாம் என இராணுவ புலனாய்வுப் பிரிவு முன் கூட்

இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த 19-ம் திகதி சிறிலங்கா கடற்படையின் 'சாகரவர்த்தனா' என்ற போர்க்

## அந்தியேட்டி அழைப்பிதழ்

### கப்டன் இசைமாறன் (கவாஸ்கர்)

[முல்லை மாவட்ட மருத்துவப் பொறுப்பாளர்]

(கனகராஜா பிறேம்சந்திரன்)

பருத்தித்துறை

நாளை புதன்கிழமை (28-09-94) நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

நன்றி

புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி.

- குடும்பத்தினர்

(9513)

## 95-ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்

19 03-1973

ஆண்டவன் அணைப்பில்

25-06-1994

### செல்வன் மகாலிங்கம் புவேந்தன் (பாபு)

எங்கள் குலவிளக்கே கண்மணியே
எம்மை விட்டுப் பிரிந்தனையோ
சற்குணங்கள் பல கொண்டு
சார்ந்தோரை வசங்கொண்டு
நற்குணவாய் வாழ்வாய் என்று
இன் கனவு கண்டிருந்தோம்
எம் முன்னே காலனவன் கவர அஞ்சி
கண்காணா இடத்தினிலே கவர்ந்த மர்மமென்ன
நன் மலரால் உன் பாதம் அலங்கரிக்க எண்ணியோ
எம் மலரை பாதியிலே நீ பறித்தாய் ஆண்டவனே
எத்தனையும் தந்திடுவோம் உன்னிடத்தில்
எம்மலரை எம்மிடத்தில் தந்துவிடு ஆண்டவனே.

இன்று [27-9-94] நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலமே சமாதான முயற்சிகளில் அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். கெரில்லாய போராட்டம், மக்களது ஆதரவின் அடிப்படையிலேயே தொடர்ந்து நடைபெறமுடி

மேற்படி சங்கம் மக்கள் வங்கியின் உதவியுடன் இந்த கடன்திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது-

இக்கடனுக்கு 16வீத வட்டி சங்கத்தினால் அறவிடப்படவுள்ளதாகவும் ஆறாயிரம் ரூபா தொடக்கம் எண்ணாயிரம் ரூபா வரை விவசாயிகளிற்கு நிலப்பரப்பின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது-

நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் மந்திரி சபை முடிவுகளை ஏற்க ஜனாதிபதி டி பி. விஜே

தலைப் புலிகளால் தாக்கப்படலாம் என இராணுவ புலனாய்வுப் பிரிவு முன் கூட்டியே எச்சரித்திருந்தது எனினும் இது குறித்து கடற்படை தலைமையகம் கவனயீனமாக இருந்துவிட்டது என

கடந்த 19-ம் திகதி சிறிலங்கா கடற்படையின் 'சாகர வர்த்தனா' என்ற போர்க் கப்பல் விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

இத் தாக்குதல் குறித்து தமக்கு ஏற்கனவே தகவல் கிடைத்ததாகவும் இதனை தாம் கடற்படை அதிகாரிகளுக்கு ஏற்கனவே அறிவித்திருந்தபோதும் கடற்படை அதிகாரிகள் அசட்டையீனமாக இருந்து விட்டதாகவும் பிரிகேடியர் குலதுங்க தெரிவித்துள்ளார்.

எனவே இது ஆச்சரியம் தரும் தாக்குதல் என்று கூற முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

அப்பா, அம்மா,
மாமாமார், மாமிமார்,
சித்தப்பாமார், சித்திமார்,

[9504]

# தீர்வுக்கான முயற்சியை இந்தியா குலைக்கக் கூடாது

## யாழ் ஆயர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழர் பிரச்சினை தீர்வுக்கு எடுக்கப்படும் நடவடிக்கையை குலைக்கும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபடக் கூடாது என யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் கேட்டுள்ளதாக ஏ எவ் பி. தெரிவித்தது.

யாழ் மக்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிராக கடும் வெறுப்புணர்வு நிலவுவதை இந்தியா மன்னிக்கவேண்டும் ஏனெனில் இந்தியப் படை யாழ்ப்பாணத்தில் இருந்த போது மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டதே காரணம் என்றார் யாழ் ஆயர்.

இதேவேளை இந்தியா நேரடியாக இராணுவ ரீதியாகவோ அல்லது சிறிலங்கா இராணுவத்திற்கு ஆயுத உதவி வழங்கியோ மீண்டும் தமிழர் பிரச்சினையில் தலையிடலாம் என யாழ். மக்கள் அஞ்சுவதாக ஏ.எப்.பி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமராக சந்திரிகாபதவி ஏற்றதும் இந்திய தூதுவர் வர்மா சந்திரிகாவை சந்தித்ததும் கடந்த வாரம் மூத்த அதிகாரியும் சமாதான பேச்சில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ளவருமான லயனல் பெர்னாண்டோ இந்தியா சென்றதும் இந்திய தலையீட்டு ஆபத்து இருப்பதை காட்டுவதாக ஏ எப் பி செய்தியாளர் கூறுகிறார்.

# யாழ்.மாநகர ஆணையாளர் கொழும்பு பயணமானார்

தண்ணீர் பவுசர், அம்புலன்ஸ் வண்டி, குப்பை அகற்றும் கொள்கலன் யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு ஆணையாளர் பூர்வாங்க பேச்சு நடாத்துவார்.

யாழ் மாநகர சபைக்கு தண்ணீர் பவுசர் ஒன்று, அம்புலன்ஸ் வண்டி ஒன்று, குப்பை அகற்றும் கொள்கலன் ஒன்று ஆகிய பொருட்கள் ''யுனிசெவ்'' நிறுவனத்தினால் அன்பளிப்பு செய்யப்பட்டிருந்தது.

இவற்றை யாழ்ப்பாணம் எடுத்துவரும் முயற்சிகளை பலமுறை மேற்கொள்ளப்பட்டும் பலன் அளிக்காததால் பல மாதங்களாக கொழும்பில் தேங்கி கிடக்கின்றன.

கடந்த சனிக்கிழமையன்று கொழும்பு சென்ற யாழ் மாநகர சபை ஆணையாளர் யாழ்ப்பாணத்தில இவற்றின் தேவைகளை வலியுறுத்த தமது உயர் அதிகாரிகளுக்கு விளக்குவார்.

இதைதொடர்ந்துஇவற்றை இம்முறை எடுத்து வருவதற்கான பூர்வாங்க பேச்சுக்களை நடாத்தி அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக யாழ் மாநகர சபை உயர் வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

(88) (நி)

# மாநகரசபை வெற்றிடம் நிரப்புவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வீதி விளக்குகளைஅதிகரிப்பதற்குஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

கடந்த சனியன்று கொழும்பு சென்ற யாழ் மாநகர சபை ஆணையாளர் தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள வெற்றிடங்களை புதியவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு தமது உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார். இதில் சாதகமான பதில் கிடைக்கும் பட்சத்தில் வெற்றிடங்கள் உடன் நிரப்பப்படவுள்ளன

அத்தோடு யாழ் நகரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீதி விளக்கு சேவை முழுமையாக வெற்றியளித்ததைத் தொடர்ந்து மேலும் பல இடங்களுக்கும் அதை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் அவரது பேச்சுக்களில் ஆராயப்படவுள்ளதாக யாழ் மாநகரசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

(88) (நி)

# வடபகுதிக்கான ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆரம்பம்

வட பகுதிக்கென விசேட எவ்.எம் ஒலிபரப்பு சேவை ஒன்றை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கவுள்ளது. இந் நிகழ்ச்சிகள் எவ். எம். 102 அலை வரிசையில் காலையில் 9-10 மணிவரையும் தொடர்ந்து நண்பகல் 12-1 மணி வரையும், பின 2-2 45 வரையும் பின் 9-10 மணிவரையும் ஒலிபரப்பப்படவுள்ளது.

# பிரதமரின் முயற்சிக்கு பௌத்த குருமார் ஆதரவு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கான பொருளாதாரத் தடையை தளர்த்துவதற்கு சிறிலங்கா அரசு எடுத்துள்ள நடவடிக்கையானது இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காண வழிகோலியுள்ளது. இவ்வாறு தேசிய பௌத்த சமாதான நிறுவனம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜகிரியவில் உள்ள சிறி அமர விகாரையில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்திய இவ் அமைப்பினர் மேலும் கூறுகையில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண பிரதமர் எடுக்கும் முயற்சிகளுக்கு ஆக்க பூர்வமான முறையில் ஆதரவு தரப்படும் எனவும், பௌத்த குருமாரை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒற்றுக்கேட்கப்பட்ட தொலைபேசி விபரம் தருக

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

[கொழும்பு]

இதுவரை காலமும் ஒற்றுக் கேட்கப்பட்ட தொலைபேசி அழைப்புகள் பற்றிய விபரங்களை தமக்கு தருமாறு ஜனாதிபதி டி பி, விஜேதுங்கவிடம் தபால் தந்தி அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வாறு தொலைபேசி அழைப்புகளை ஒற்றுக்கேட்டமை தற்போது ஜனாதிபதிச் செயலகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. யார், யாருடைய தொலைபேசி அழைப்புகள் தேசநலன் கருதி ஒற்றுக் கேட்கப்பட்டன என்பது குறித்து மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார்.

தொலைபேசி அழைப்புகளை ஒற்றுக்கேட்டல் ஜனநாயக மரபிற்கு ஒவ்வாத செயல். நெருக்கடி நிலையில் கூட அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

# மாணவர் அறிவை வளர்க்க பாடசாலைகளில் நூலகம்

(கொழும்பு)

நாடு பூராவும் உள்ள பாடசாலைகளில் முழுமையான வாசிகசாலைகளை அமைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது- தற்போது வாசிகசாலைகள் இல்லாப் பாடசாலைகளில் வாசிகசாலைகள் அமைக்கப் படுவதுடன் வாசிகசாலைகள் உள்ள பாடசாலைகளில் அவற்றின் தரத்தை உயர்த்தவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது-

பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப்பழக்கம் வீழ்ச்சியடைந்திருப்பதால் அவற்றை சீராக்கி அறிவாற்றலை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகுமென்று கல்வி அமைச்சு தெரிவித்திருக்கிறது:

# குடிநீர் பவுசர் தயாரிக்க மாநகரசபை முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர்ப்பிரச்சினை உள்ள பகுதிகளிற்கு குடிநீர் வழங்கவென மேலும் ஒரு தண்ணீர் பவுசரை யாழ் மாநகரசபை நீர்விநியோகப் பகுதியினர் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதே போன்று ஒரு பவுசர் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இது பலனளிக்கும் பட்சத்தில் மேலும் இவ்வாறான பவுசர்களை தயாரித்து சேவையில் ஈடுபடுத்த முயற்சி எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(பா)

# இராணுவ நடவடிக்கையால் ஒரு கோடி ரூபா நட்டம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு ஒரு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது

1990-ம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் மேற்படி சங்கங்களிற்கு ஒருகோடிரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்களையும் இழந்துள்ளனர்.

இந்த இழப்புத்தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பனை தென்னைவள) ஊடாக யாழ் அரச அதிபருக்கும் திட்டப் பணிப்பாளருக்கும்வடகிழக்கு மாகாணசபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# எருமை மிகு தாயகமாக தமிழ்நாடு மாறிவிட்டது

### கருணாநிதி வர்ணனை

(சென்னை)

தமிழ்நாடு இன்று அருமை மிகு தாயகமாக இல்லை. செந்தமிழ் உணர்வெனும் செந்தாமரை மொட்டுக்களை முரட்டுக் கால்களால் மிதித்து நகரும் எருமை மிகு தாயகமாகி விட்டது. இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், முன்னாள் முதல்வருமான மு. கருணாநிதி கூறியுள்ளார்.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு தி. மு. க வினருக்கு முரசொலி நாளேட்டில் எழுதிய கடிதம் ஒன்றிலேயே கருணாநிதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், அருமை மிகு தாயகத்தை காத்திடத்தான் அழைக்கின்றார் அண்ணா. அருமை மிகு தாயகத்திற்கு என்ன நடந்தது இப்போது?

எதிரிகள் இட்டழைத்த இலட்சங்களுக்கும், துரோகிகள் தொட்டணைத்து தந்த பெருந்தொகைகளுக்கும் விலைபோன கதை; ஊரறிந்த கதையான நிலையில் கோபுர மேறி நின்று கொள்கை முழக்கம் செய்கிறார்களே அவர்களிடமிருந்து தான் தாயகத்தை காத்திடத்தான் அண்ணா அழைக்கின்றார். காற்றைச் சுவாசிப்பதற்கு மட்டும் தான் தற்போதைக்கு லஞ்சம் தர வேண்டியதில்லை அதுவும் எதிர்காலத்தில் எத்தனை லட்சம் அல்லது கோடி தர வேண்டியிருக்குமோ தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# விடுதலைப் புலிகளுடன் எமதுகட்சிக்கு எந்தத் தொடர்பும் இல்லை

### -வை. கோபாலசாமி அறிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் தமது கட்சிக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என மறுமலர்ச்சித் தி. மு. கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

சென்னைக்கு நடைபயணம் மேற்கொண்டிருந்தவேளை திண்டிவனத்தில் தினமணிக்கு சிறப்புப்பேட்டி ஒன்றை ம தி. மு க பொதுச்செயலாளர் வை. கோபாலச்சாமி வழங்கினார்,

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைப் பகிரங்கமாக கண்டிப்பீர்களா? என கேட்கப்பட்டது இதற்கு அவர் தமிழ்நாட்டில் எந்தப்போராளி இயக்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமாக இருந்தாலும் கண்டிப்பேன். வன்முறைச்சம்பவத்தில் ஈடுபடுவதை அனுமதிக்கக்கூடாது, இதைத்தடுப்பதற்கு அரசும் காவல்துறையும் எடுக்கும் நியாயமான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவோம் என்று கூறியிருக்கின்றேன்.

விடுதலைப்புலிகளுக்கும்எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எங்கள் இயக்கத்தை களங்கப்படுத்த அபாண்டமாக பழி சுமத்த முயல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தோற்றுப்போவார்கள்.

தீவிரவாதஅமைப்புகளோடு இயக்கத் தோழர்கள் யாராவது தொடர்பு வைத்திருப்பதாக சந்தேகத்திற்கிடமின்றி நாங்கள் அறிய நேர்ந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் அவர்களுக்கு இயக்கத்தில் இடமில்லை என்றார்.

# தமிழக காங்கிரஸ் தலைமை: பறிக்க முயலும் மூப்பனார்

[சென்னை]

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைமையைக் கைப்பற்ற கட்சிக்குள் குழப்பம் விளைவிக்கிறார் மூப்பனார் என்று வாழப்பாடி ராமமூர்த்தியின் ஆதரவாளரும், மத்தியசென்னை மாவட்டத் தலைவருமான விஜயன் குற்றம் சாட்டியுள்ளார்,

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் காமராஜர் ஆட்சியை அமைப்போம் என்று கூறும் அதே நேரத்தில் அ.தி மு கவுடன் கூட்டணி என்று மேலிடம் முடிவு எடுத்தால் அதை ஏற்பதாகவும் கூறுகிறார். தமிழககாங்கிரசின் தலைமையைக் கைப்பற்றும் நோக்குடன் மூப்பனார் முரண்பாடாக பேசி கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துகிறார் எனவும் தெரிவித்தார்.

# சோனியா காந்தி பேரவை தமிழ்நாட்டில் ஆரம்பம்

(சென்னை)

தமிழ்நாட்டில் சோனியா காந்தி பேரவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது வாழப்பாடி ராமமூர்த்தி ஆதரவாளர்கள் இப்பேரவையை ஆரம்பித்துள்ளனர். மாவட்ட அளவில் நிர்வாகிகளை நியமிக்கவும், முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும். தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தில் தற்போது செயற்பட்டு வரும் சோனியா காந்தி பேரவையின் அலுவலக இடத்தை தம்மிடம் மீள ஒப்படைக்கும்படி மூப்பனாரின் ஆதரவாளரான செல்லக்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனால் இருகோஷ்டிகளுக்கும் இடையேயான உறவில் முறுகல் நிலை இருப்பதாக கூறப்படுகிறது.

# கொள்ளை நோயினால் குஜராத்தில் 42 பேர் பலி

(டில்லி)

குஜராத் மாநிலத்தில் பிளேக் எனப்படும் கொள்ளை நோய் பரவியுள்ள சூரத் மாவட்டத்தில், நோய் பாதித்துள்ள மக்களை இனம் காண்பதில் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் விதத்தில் விரைவு நடவடிக்கைப் படையின் இரண்டு அணிகள் அம்மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சூரத்நகரில் பிளேக்என்னும் கொள்ளை நோயின் காரணமாக இதுவரையில் 42 பேர் உயிரிழந்திருப்பதும், 407 க்கும் அதிகமானோர் வைத்திய சாலைகளில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப் பட்டிருப்பதும் தெரிந்ததே.

இதேவேளை இந்நோய் பரவுவது தற்சமயம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும், வேறு மாவட்டங்களுக்கு இந்நோய் பரவும் ஆபத்து இல்லைஎனவும் கூறப்படுகிறது;

# அண்ணாவின் எழுத்துக்கள் அரசுடமை ஆகியுள்ளது

### - ஜெயலலிதா அறிவிப்பு

(சென்னை)

பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்கள் அனைத்தும் அரசுடமை ஆக்கப்படும். இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் நிகழ்ந்த விழாவொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எந்தவொரு மாமனிதரின் பேச்சுக்கள் நமக்கு வேதமாக இருக்கிறதோ, எந்தவொரு மாமனிதரின் எழுத்துக்கள் நமக்கு லட்சியங்களாக மிளிர்கின்றதோ, அந்த அணையாத அறிவு தீபம் பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களை அரசு உடைமையாக்கி இன்று ஆணை பிறப்பித்துள்ளேன். அவரது பிறந்தநாளுக்கு உங்கள் அனைவரின் சார்பிலும் உங்கள் அன்பு சகோதரி செலுத்துகின்ற காணிக்கை இது. அண்ணாவின் அரசியல் சிந்தனைகளும், செந்தமிழுக்கு அவர் ஆற்றிய அரும்பணிகளும், இனி அரசுடமை ஆகும். அவரது படைப்புக்கள் அனைத்தையும் இனியார் வேண்டுமானாலும் அச்சிட்டு வெளியிடலாம். அதன் மூலம் அவரது உலகளாவிய கொள்கைகளும், திராவிட இயக்க இலட்சியங்களும் தமிழகத்தில் மட்டுமன்றி இந்திய துணைக்கண்டம் முழுவதும் ஏன் உலகம் முழுவதும் கூட பரவும் எனவும் தெரிவித்தார்.

# நதியென நடந்தோரே நாட்டுக்கு உழைக்க வருக

### வை. கோபாலசாமி அழைப்பு

(சென்னை)

''நதியென நடந்தோரே நாட்டின் கதியென உழைப்போம் வாரீர்'' என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கூறியுள்ளார்,

கன்னியா குமரியில் இருந்து ஆரம்பித்த எழுச்சிநடைப் பயணம் சென்னையில் நிறைவு பெற்றதை தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் தன்னலம் எண்ணாத அண்ணாவின் தம்பியரே, கண்ணை இமைகள் காப்பது போல் நம் அன்னைத் தமிழை - அழகு தமிழ் மண்ணை-அதன் மரபுகளை- கலாசாரத்தை-பண்பாட்டை தமிழ் மக்களைக் காத்திட தன்னிகரில்லாத தம்பியர் படையாக நம்மை உருவாக்கிய தென்னவர் குலவிளக்காம் பேரறிஞர் அண்ணா பிறந்த பொன்னாளாக இந்நாள் புலர்ந்து இருக்கிறது.

இந்த நன்நாளில்தான் நம் எழுச்சி நடைப்பயணம் தமிழகத்தின் தலைநகராம் சென்னையுள் நுழைந்து அண்ணா நகரில் நிறைவு பெறுகின்றது வையம் ஆண்டவண் தமிழ் மரபின் கலாசார மறுமலர்ச்சியை உருவாக்க இந்த எழுச்சி நடைப்பயணம் தந்துள்ள உணர்ச்சி அடித்தளமாக அமையும். தமிழக இளைஞர் பட்டாளம் இனிவர விருக்கும் மாற்றங்களையும், ஏற்றங்களையும் தோற்றுவிக்க தன்னை அர்ப்பணிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்;

# தமிழ்நாட்டில் பா. ஜனதா பாரிய சக்தியாக வளரும்

### - சத்ருக்கன் சின்கா

(சென்னை)

தமிழ் நாட்டில் பாரதிய ஜனதாக் கட்சி பாரிய சக்தியாகவளரும். இவ்வாறு இந்தி திரைப்பட நடிகரும், பாரதீயஜனதா பிரமுகருமான சத்ருக்கன்சின்கா கூறியுள்ளார்.

மதுரையில் பாரதிய ஜனதா பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில், பாரதிய ஜனதா இந்தியாவில் தனிப்பெரும் கட்சியாக வளர்ந்துள்ளது பாரதிய ஜனதாவில் மிகச் சிறந்த ராணுவ தளபதிகள் முதல் நீதிபதிகள், டாக்டர்கள் என்று பலரும் இணைந்துள்ளனர் நாட்டில் ஊழலற்ற ஆட்சி அமைய, பொருளாதாரம் வளர, ஒற்றுமையை ஏற்படுத்த பாரதிய ஜனதாக் கட்சியால் தான் முடியும் எனவும் தெரிவித்தார்.

# சிவாஜிக்கு செவாலியர்விருது

(பாரிஸ்)

பிரான்ஸ் நாட்டின் அதியுயர் விருதான செவாலியர் விருது நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு அண்மையில் வழங்கப்பட்டுள்ளது ஆசியாவில் செவாலியர் விருது பெறும் முதலாமவர் சிவாஜி கணேசனே என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய கடற்பரப்பில் சிங்கள மீனவர் கைது

(சென்னை)

தூத்துக்குடி கரைக் கப்பால் இரு சிங்கள மீனவர்கள் இந்திய கரையோரக் காவற் படையால் கைது செய்யப்பட்டனர். தகுந்த அனுமதியின்றி இந்திய கடல் எல்லையில் இவர்கள் மீன் பிடித்ததால் கைதானதாக தெரிவிக்கப் படுகிறது.

இவர்களது படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

# கொழும்பில்தமிழ்இளைஞர் கைதாவதை தடுக்கவும்

### தர்மசிறி சேனநாயக்க கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது

ப்பு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

# அமைச்சு மட்ட முரண்பாடு அதிபர்கள் பாதிப்பு

அரியாலை தந்த தவப்புதல்வன்

பிரணவனுக்கு

எமது கண்ணீர் காணிக்கை

ஞர்கள் கைதுசெய்யப்படுவது மற்றும் தடுத்து வைக்கப்படு வது போன்றவை உடனடி யாக நிறுத்தப்பட வேண்டு மென்று உல்லாசப் பயண, தகவல் துறை விமானப்போக் குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க பிரதிப் பாதுகா

அவர் மேலும் கூறுகையில், கைதாகுபவர்களின் பெற் றோர்கள் மற்றும் உறவினர் கள் கைது இடம்பெற்றவுடன் அது பற்றிய விபரங்களை தமக்கு உடனடியாக தெரிவிக் குமாறும் கேட்டுக்கொண் டார்.

## மின்சாரம் வழங்குவது குறித்துஅரச அதிபர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு,மீண்டும் மின் சாரத்தை வழங்குவதற்குரிய முட்டுக்கட்டைகளைநீக்குவது தொடர்பாக, பிரதி பாது காப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவிடம், யாழ் அரச அதிபர் சந்தித்து பேசியுள்ள தாக கொழும்பிலிருந்து கிடை க்கும் தகவல்கள் தெரிவிக்கின் றன.

யாழ் குடா நாட்டுக்கான மின்சாரம் உடனடியாக வழ ங்க வேண்டியதன் அவசியத் தையும், மின்சார உபகரணங் களை உடனடியாக அனுப் பும்படியும் அவர் பிரதி பாது காப்பு அமைச்சரை கேட்டுள் ளதாகவும் தெரியவருகின்றது

பிரதிபாதுகாப்பு அமைச்சரின் படத்தை கிழித்த

## பொலிஸ்இன்ஸ்பெக்டருக்கு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரதி பாதுகாப்புஅமைச்சர் அநுருத்த ரத்வத்தவின் உரு வப்படத்தை கிழித்தெறிந்து குப்பைக்கூடைக்குள் வீசிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் லொக்கு பண்டார கடுமை யாக எச்சரிக்கப்பட்டார்.

கண்டி வத்தேகம பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; தேர்தலி ன் பின்னர் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியேற்ற அநு ருத்த ரத்வத்தவின் படத் தை சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொ லிஸ் இன்ஸ்பெக்டரின் மேசைக் கண்ணாடியின் கீழ் வைத்துள்ளார். அதனைக் கண்ணுற்ற பொலிஸ் இன்ஸ் பெக்டர் லொக்கு பண்டார அப்படத்தைக் கிழித்து குப் பைக் கூடைக்குள் வீசினார்.

இச் சம்பவம் பொலிஸ் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை தொ டர்ந்து சம்பந்தப்பட்ட பொ லிஸ் இன்ஸ்பெக்டர் கடுமை யாக எச்சரிக்கை செய்யப் பட்டார்.

[யாழ்ப்பாணம்]

கல்விச் சேவைகள் சபையி னதும், பொதுநிர்வாக அமை ச்சு அலுவலகத்தினதும் முர ண்பட்ட அறிவித்தல்களி னால் விஞ்ஞான டிப்பு ளோமா பட்டம் பெற்ற அதி பர்கள் பாதிப்படைந்துள்ள னர்.

யாழ் கல்வி வலயம் ஒன்றில் விஞ்ஞான டிப்புளோமா பட் டம்பெற்ற நான்கு ஆசிரியர் கள், அதிபர் தரம் II இற்கு நியமிக்கப்பட்டனர்.

இவர்களிற்கு டிப்புளோமா வுக்குரியசம்பளம்வழங்கப்படும் என கல்விச் சேவைகள் சபை யின் அறிவித்தல் ஒன்று குறிப் பிட்டிருந்தது.

ஆனால் இவர்களிற்கு அதி பர் தரம் II ன் உச்சசம்பளமே வழங்கப்பட்டது,

அதிபர் தரம் IIன் உச்ச சம் பளத்தைவிட டிப்புளோமா சம்பளம் உயர்வானதால் இவர்கள் பொது நிர்வாக அமைச்சின் அலுவலகத்திற்கு இதுபற்றி முறையிட்டிருந்த பொழுது அதிபர் தரம் II ற் குரிய சம்பளமே வழங்க முடி யும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் கல்விப் பணிப்பா ளர் செல்வி பெரியதம்பி அவர்கள் இம்முறை கொழும்பு செல்லும் பொழுது இரு அலுவலகங்களின் உயர் அதிகாரிகளுடன் இதுபற்றி பேச்சு நடத்தி பாதிக்கப் பட்ட அதிபர்களிற்கு சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள ஆவன செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [88]

## பயிற்சி ஆரம்பிக்காமைக்கு விமானிகள் கண்டனம்

(கொழும்பு]

எயார் லங்கா நிறுவனத்தி னால் தெரிந்தெடுக்கப்பட்ட எட்டு விமானிகள் தமக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படா ததைக் கண்டித்து அரசுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ள னர்.

106 பரீட்சார்த்திகள் தோற்றிய பரீட்சை ஒன்றிலி ருந்து இந்த எட்டு விமானி களும் தெரிவு செய்யப்பட்டி ருந்தனர் இதில் எஞ்சியுள்ள ஏனைய பரீட்சார்த்திகளின் ஆட்சேபனைகளின் காரண மாகவே தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் பயிற்சி யும் பின் போடப்பட்டிருக்கி றது. இதனை இவர்கள் கண் டித்து இருப்பதுடன், பரீட் சையில் தோல்வியுற்றவர்க ளின் விபரீதமான போக்கு இது எனவும் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

## வறுமை ஒழிப்புக்கென புதிய திட்டம் ஆரம்பம்

-அமைச்சர் திசாநாயக்க தகவல்

(கொழும்பு)

இளைஞர் மற்றும் யுவதிக ளின் ஒத்துழைப்புடன் ஜன சவிய திட்டம் தொடர்ந்து அமுல்படுத்தப்படும் எனவும், கிராமிய மட்டத்திலிருந்து குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வறுமை நிலையை உயர்த்த நடவடி க்கை எடுக்கப்படும் எனவும், இதற்காக சமுர்த்தி என்ற பெயரில் புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறப்படுகின்றது.

இத் திட்டத்தில் 36,000 இளைஞர்கள் ஈடுபடுத்தப்படு வார்கள் எனவும், கிராம சேவகர்கள் பிரிவுகள் தோறும் இத்திட்டம் அமுல் படுத்தப் படுவதற்கான துரித நடவடி க்கை மேற்கொள்ளப்பட்டிரு க்கிறது எனவும், இளைஞர் விவகாரம், கிராமிய அபிவிரு த்தி மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். பி. திசா நாயக்க கூறியுள்ளார்.

இது பற்றி இசுறுபாயா கட்டிடத்தில் செய்தியாளர் களுக்கு விளக்கிக் கூறிய அமை ச்சர் மேலும் குறிப்பிடுகை யில், முன்னைய அரசாங்கம் வறுமையை ஒழிப்பது என்ற போர்வையில் பல திட்டங் களை அமுல் நடத்திய போதும் அவை முற்றாக வெற்றி பெறவில்லை கிராம ங்கள் தோறும் இன்னும் பல ஆயிரக்கணக்கான குடும்பங் கள் குறைந்த வருமானத்து டன் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் இளை ஞர்களே ஒரு நாட்டின் உயிர் நாடிகள் அதனால் அரசியல் சார்பற்ற முறையில் நாடெ ங்கும் உள்ள 14,000 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 36,000 இளைஞர்களின் ஒத் துழைப்புடன் சமுர்த்தி என்ற திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## விவசாயத்துறை விருத்திக்கு ஜப்பான் தொடர்ந்து உதவும்


(கொழும்பு)

இலங்கையின் விவசாய அபி விருத்திக்கு ஜப்பான் தொட ர்ந்தும் உதவி வழங்கும் விவ சாய, நீர்ப்பாசன அபிவிருத் திக்கு தேவைப்படும் விவசாய உபகரணங்களும் இதில் அட ங்கும். இவ்வாறு ஜப்பானிய பீக்கய்ஷா நிறுவனத்தின் பணிப்பாளர் இவாஓ...... ஒஹிஷி அண்மையில் விவசாய காணி வனவள அமைச்சர் டி. எம். ஜயரத்னாவை சந்தித்துப் பேசியபோது தெரி வித்தார்.

இச்சந்திப்பின் போது புதிய அரசாங்கம் விவசாயத்துறை அபிவிருத்திக்கும், சமூக முன் னேற்றத்திற்கும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அமை ச்சர் விளக்கிக்கூறியமை குறி ப்பிடத்தக்கது.

மண்ணிலே
05-07-1974

மண்ணுக்காக
19-09-1994



## கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன்

(குகதாசன் பிரணவன்)

உதயகுமார் வீதி (முதலியார் வீதி)'
நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

பிரணவன் நீ எங்கேஐயா!
காணாமற் போய் விட்டாய்?
வீழ்ந்த பிணம் மிதித்து - பிறர்
வெளிநாடு போகையிலே
வீழ்ந்தாலும் உன் மண்ணில்
வீழ்வதற்கோ நின்று இருந்தாய்
எங்கும் நீர் செல்லவில்லை
எம்மை விட்டு மறையவில்லை
கனிவான பார்வையும்
நயமான புன்சிரிப்பும்
எம் முன்னே நிற்கையில்
நீர் எம்மை விட்டு மறையவில்லை.

19-09-94 அன்று காங்கேசன்துறை கடற்பரப்பில் கடல ரசன் கப்பல் தகர்ப்பின்போது தன்னை அர்ப்பணித்து அரியாலை தந்த தவப்புதல்வன் கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன் (குகதாசன் பிரணவன்) அவர்களுக்கும் அவருடன் இணைந்த கடற்கரும்புலி லெப். கேணல் நளாயினி, கடற்கரும்புலி மேஜர் மங்கை, கடற்கரும்புலி கப்டன் வாமன் ஆகியோருக்கும் எமது இதய அஞ்ச லியை காணிக்கையாக்குகின்றோம்.

உறவினர்கள், நண்பர்கள்
உதயகுமார் வீதி (முதலியார் வீதி),
நாவலர் றோட், அரியாலை,
யாழ்ப்பாணம்.

(9520)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

## சிந்தனைக்கு..

உழைத்து விதைத்து உகுத்த கண்ணீரை
பாத்தியில் பாச்சி பயிர் செய்ய பாடுபடாமல்
தாழ்த்து குலுங்கும் தங்க நிற தானியத்தை
அறுவடை செய்ய மட்டும் ஆசை கொள்ளலாமோ?
- யொஹன் கேத்தே.


# ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்-05


## முனைப்பு பெற்று வரும் முட்டுக்கட்டைகள்

பலாலி கூட்டுப்படைத் தளத்தில் இருந்து சிறிலங்கா இராணுவம் நேற்று முன்தினம் மேற்கொண்ட நடவடிக்கையில் அப்பாவிப் பொதுமக்கள் ஆறு பேர் கொல்லப்பட்டதுடன், 30 க்கு மேற்பட்டோர் காயமும் அடைந்துள்ளனர். அத்தோடு கோவில்கள், வீடுகள் எனப் பெருமளவு சொத்துக்களும் பாதிப்படைந்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு காண்பதற்கான முயற்சியில் சிறிலங்கா அரசாங்கம் தமது பிரதிநிதிகளின் பெயர்ப்பட்டியலை விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்து நான்கு நாட்களுக்குள் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் குறித்து சிறிலங்கா அரசாங்கத் தரப்போ அன்றி இராணுவத்தரப்போ பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் சுலபமான விளக்கம் கூறிவிடலாம். யுத்தநிறுத்தம் ஒன்று அமுலில் இல்லாத போது மேற்கொள்ளப்பட்ட வழமையான நடவடிக்கை என அவர்கள் தெரிவித்திருக்கலாம்,

சிலசமயம் இராணுவம் மேற்கொண்ட முன்னைய நடவடிக்கைகளை மறந்து/மறைத்து, சில அரசியல்வாதிகளோ அன்றி வெளிநாட்டு செய்தி நிறுவனங்களோ மன்னார் கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் கடற்படையினர் மீது மேற்கொண்ட நடவடிக்கைக்குப் பதில் நடவடிக்கை என்றும் கூறலாம்; இவ்வாதத்தினை இராணுவத் தரப்பின் ஒரு பகுதியினரும், அரசாங்கத் தரப்பினில் ஒரு பகுதியினரும் கூட சரியானவிமர்சனம் எனக் கருதலாம்.

ஆனால், இவ் விமர்சனங்கள் எந்தளவிற்கு பொருத்தப்பாடானவை? எந்தளவிற்கு அரசாங்கத்தின் சமாதானம் குறித்த நிலைப்பாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவக் கூடியவை என்பது கேள்விக்குரியதே ஆகும்.

ஏனெனில் விடுதலைப்புலிகள் தரப்பு ஆரம்பத்தில் இருந்தே போர் நிறுத்தத்தை வற்புறுத்திய போதும் அதனை அரசாங்கமும், இராணுவத் தரப்பும் நிராகரித்தே வந்தன, அத்தோடு சமாதானத்திற்கான முயற்சிகள் தொடங்கப்பட்ட வேளையில் முதலில் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்ததும் இராணுவத்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு;

## போலி முகவரிடம் ஏமாந்தோருக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யாத பல வேலை வாய்ப்பு முகவர் நிலையங்கள் தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக்கூறி அப்பாவி மக்களிடம் பெருந்தொகையான பணத்தை மோசடி செய்துள்ள பல சம்பவங்கள் தொழில் தொழில்பயிற்சி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

இவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் அளிக்கும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள தொழில், தொழில்பயிற்சி அமைச்சர் மஹிந்தராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்

பணத்தைப் பறிகொடுத்தவர்கள் கீழ்க் கண்ட விபரங்களை அனுப்பி வைக்குமாறு தொழில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

விண்ணப்பதாரியின் பெயர், தனிப்பட்ட விலாசம் கொடுத்த பணம் காசு கொடுத்த திகதி கோரிய வேலையின் தன்மை இவற்றை பூரணப்படுத்தி பணம்கொடுத்தது தொடர்பாக பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்திருப்பின் அதன் பிரதியையும் இணைத்து தொழில் அதிகாரி, தொழில் அமைச்சு. இரண்டாவது மாடி, தொழில் திணைக்கள செயலகம் நாரஹேன்பிட்டி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## இலவச பயணச்சீட்டுவழங்க மாகாண அமைச்சு மறுப்பு

(மட்டக்களப்பு)

கொழும்பில் நடைபெற்ற தேசிய பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்ட 400 மாணவர்களுக்கு மாகாண கல்வி அமைச்சு இலவச ரயில்வே வாரண்டுகளை வழங்க மறுத்துள்ளது.

இத்தகைய போக்குவரத்துகளுக்கு முன்பு மத்திய கல்வி அமைச்சு இலவச பயணச்சீட்டுக்களை வழங்கி வந்தது. ஆனால் கல்வி நிர்வாகம் பரவலாக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து மாகாண கல்வி அமைச்சு நிதிப் பற்றாக்குறையை காரணம் காட்டி இலவச பயணச் சீட்டு வழங்கவில்லை.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 400 மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## ஐ. தே. க. தலைவர் ஒருவரின் தொலைபேசியை ஒற்று கேட்க முயற்சி

(கொழும்பு)

தொலைபேசி இணைப்புக்களை ஒற்றுக் கேட்பதற்கு பயன்படுத்தும் விசேட சாதனம் ஒன்றை ஐ. தே. கவின் தலைவர் ஒருவர் கட்சித் தலைவரின் தொலைபேசி உரையாடலை ஒற்றுக் கேட்க பயன்படுத்துவதற்காக கோரியிருப்பதாகதபால், தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளித்த அமைச்சர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தின் அல்லது நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு இவ் வேண்டுகோள் விடப்படவில்லை கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடி தொடர்பாகவே அவர் இவ்வாறு கேட்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்பது நியாயமானது என்று ஜனாதிபதி கருதினால் 1984-ம் ஆண்டு முதல் ஒற்றுக் கேட்கப்பட்டவர்களின் பட்டியல் ஒன்றைப் பொதுமக்கள் பார்வைக்காக தரவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்,

மேலும் தனிப்பட்ட நபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்பது சட்ட விரோதமானதும் ஜனநாயக விரோதமானதும் ஆகும் தொலைபேசி உரையாடல்களை ஒற்றுக் கேட்பது அவசியமாயின் அதுபற்றி அமைச்சரவையுடன் கலந்துரையாடப் படவேண்டுமெனவும் இதுபற்றி பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நடைமுறை இதுவரை பின்பற்றப்படவில்லை எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## ஐ.தே. கவின் தேர்தல் வேலைக்கு வழங்கிய வாகனங்கள் மர்ம மறைவு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் சமயத்தில் ஐ. தே. க. வின் உதவிக்காக வெவ்வேறு நிறுவனங்களாலும் தனி நபர்களாலும் ஐ. தே. க. செயலகம்

டொய்ட்டா டற்சன், இசுசு, பஜீரோ இனங்களைச் சேர்ந்த இவ் வாகனங்கள் ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. அவை ஜனாதிபதியின் மிகவும் நெருங்கிய விசு

ர்களின் பெயரில் பதிவு செய்து கொண்டிருப்பதாக ஐ. தே. கவிற்கு இப்போது தெரிய வந்துள்ளதாம்,

அமைச்சராக விஜேதுங்க பதவி வகித்த காலத்திலும் பின்னர் பிரதமர் மற்றும்

### தியாகி

தம், நீராகாரம் வழங்கப்பட்டு முடிவுற்றதன் பின்னர், தியாகி திலீபன் நினைவு வீரவணக்க கூட்டங்கள் நடைபெற்றன இக்கூட்டங்களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அறிஞர்கள் பொதுமக்கள் எனப்பலரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்வுகள் யாவும் யாழ் மாட்டத்தில் கோட்ட ரீதியாக நான்கு இடங்களில் நடைபெற்றன.

வலிகாமம், தீவகக் கோட்டம் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலிலும் வடமராட்சிக் கோட்டம் மாலுச்சந்தி பிள்ளையார் கோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டம் நுணாவில் மணங்குணாப்பிள்ளையார் கோவில் முன்றலிலும் வடமராட்சி கிழக்கு மாமுனை விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகளில் பெருமளவிலான பொதுமக்கள் திரண்டு வந்து கலந்து கொண்டனர்.

### வலிகாமம் தீவகம்

காலை 7.00 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார் மலர் மாலையை தமிழீழ மாவீரர் பணிமனை பொறுப்பாளர் (மகளிர்) அர்ச்சனா அணிவித்தார்.

தொடர்ந்து தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மக்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

நல்லூர் முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைக்கப்பட்டுள்ள தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு பொன் தியாகம் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார்.

திலீபனின் சகோதரன் மாலை அணிவித்தார்.

காலை நிகழ்வுக்கான ஆரம்ப உரையை நிதர்சனம் பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார்;

தொடர்ந்து நடைபெற்ற அடையாள உண்ணாவிரதத்திலும் கலை நிகழ்விலும் பெருமளவு பொதுமக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர்

மாலை 4-30 மணிக்கு அடையாள உண்ணாவிரதம் பூர்த்தியடைந்ததன் பின்னர் மாலை 5 30 மணியளவில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது

இக்கூட்டத்திற்கு யாழ் வட்டப் பொறுப்பாளர் செந்தமிழன் தலைமை வகித்தார். தொடர்ந்து நினைவுரைகளை வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திருக்குமாரன், விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு.மு.வே.யோ வாஞ்சிநாதன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் தணிகைச் செல்வி ஆகியோர் உரை நிகழ்த்தினர். இதன் பின்னர் தென்மராட்சி கலைபண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

### வடமராட்சியில்

வடமராட்சிக் கோட்டத்தில் மாலிசந்தியில் பிரதான பந்தல் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைத்து சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து உண்ணாநோன்பு அனுஷ்டிக்கப்பட்டது.

பருத்தித்துறை வட்ட பொறுப்பாளர் திரு. தமிழரசன் தலைமையில் உண்ணா நோன்பு காலை 7-45 மணியளவில் ஆரம்பமானது, முதலில் வடமராட்சிக் கோட்ட பொறுப்பாளர் திரு. அருணா ஈகச்சுடரை ஏற்றிவைத்தார். வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு செல்வம் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். வடமராட்சி கோட்ட மாணவர் அமைப்பினரின் பாண்ட் வாத்திய இசையுடன் தேசியக்கொடி ஏற்றப்பட்டது,

அடுத்து லெப். கேணல் திலீபனின் உருவப்படத்திற்கு வடமராட்சிக் கோட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி நாயகி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து இதுவரை காலம் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்குமாக மௌன வணக்கம் செலுத்தப்பட்டது. வடமராட்சி கோட்ட அரசியற்துறை துணை பொறுப்பாளர் திரு. தயா அவர்களின் ஆரம்ப உரையுடன் உண்ணா நோன்பு ஆரம்பமானது.

நேற்றைய உண்ணா நோன்பில் வர்த்தகர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், மீனவர் சங்கங்கள், பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், அரச உத்தியோகத்தர்கள், தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், தனியார் நிறுவனங்கள், மாதர் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு மற்றும் பொதுநல அமைப்புக்களைச் சேர்ந்த ஊழியர்கள் உத்தியோகத்தர்கள், சிறுவர்கள், முதியோர், பொதுமக்கள் பலரும் வயது பால் வேறுபாடின்றிகலந்துகொண்டனர்

மாலிசந்திப் பந்தலில் நடைபெற்ற நேற்றைய உண்ணாவிரத நிகழ்வின் போது கும்மி நடனம், நாட்டியம், கவிதை, பட்டிமன்றம், வில்லுப் பாட்டு மற்றும் கவிதைகள் என்பன இடம்பெற்றன.

இப்பிரதான பந்தலை

ஏனெனில் விடுதலைப்புலிகள் தரப்பு ஆரம்பத்தில் இருந்தே போர் நிறுத்தத்தை வற்புறுத்திய போதும் அதனை அரசாங்கமும், இராணுவத் தரப்பும் நிராகரித்தே வந்தன. அத்தோடு சமாதானத்திற்கான முயற்சிகள் தொடங்கப்பட்ட வேளையில் முதலில் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்ததும் இராணுவத் தரப்பே ஆகும்.

ஆனால், இவை யாவற்றையும் விட முக்கியமானது சிறிலங்கா இராணுவம் தாக்குதல் நடத்தும் இலக்காகும். இதன் மூலம் தொடர்ச்சியாக அப்பாவிப் பொதுமக்கள் பலர் பலியாகவும், காயமடையவும் வேண்டி வந்துள்ளது. பெருமளவு சொத்துக்களையும் இழக்க வேண்டி வந்தது.

அதாவது, அரசாங்கம் போரை நிறுத்துவதற்குத் தயாராக இல்லை என்பது மட்டுமல்ல பொதுமக்களின் இலக்குகளின் மீது தாக்குதல்களை நடத்துகின்றது என்பதும் முக்கியமானது இந்நடவடிக்கையானது சமாதான முயற்சிகளின் போது மேற்கொள்ளப்படுவதினால் இனப்படுகொலை/ இன அழிப்பு என்ற ரீதியில் இடம்பெறாமல் போய்விட முடியாது. முன்னைய அரசாங்கமும் இதனையே செய்ததினால் தான் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற்தீர்வு காணும் முயற்சிகள் தோல்வி கண்டன.

இந்த வகையில் பேச்சுவார்த்தைக்கு முன்னர் யுத்த நிறுத்தம் ஒன்றுசெய்வதற்கில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடானது முன்னைய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் இருந்து பெரியளவிலான மாற்றத்தை கொண்டதாகக் கொள்ள முடியாது.

பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தல், பேச்சுவார்த்தைகளுக்குப் பிரதிநிதிகளை நியமித்தல், பேச்சளவில் பொருளாதாரத்தடை நீக்கல், போக்குவரத்துப் பாதை திறத்தல் போன்றவை சிலருக்குச் சில வேளை சமாதானம் திரும்புகின்றதோ என்ற மனநிலையை உருவாக்கலாம். அரசாங்கம் தனது பிரசாரமாக அதைப் பயன்படுத்தவும் முனையலாம்.

ஆனால் மக்கள் மீதான தாக்குதல்களும், அவர்களின் சொத்துக்களை அழிப்பதும் சமாதானத்தின் பால் எவருக்கும் நம்பிக்கை ஊட்டமாட்டாது. மேலும் மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்க முடியாத நிலையில் சமாதான முயற்சி தேவைதானா என்ற கேள்வியும் எழுவது தவிர்க்க முடியாது போகலாம்.

அத்தோடு விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறும் அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது நம்பிக்கை கொள்ளவில்லை என்றால் அவர்கள் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையிலோ அன்றி சமாதானத் தீர்விலோ எவ்வாறு நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்று கருத முடியும் இதேசமயம் கடந்தகால வரலாற்றின் அடிப்படையில் சிங்களத் தலைவர்கள் மீது எவ்வாறு நம்பிக்கை வைப்பது என்பது குறித்து தமிழ்மக்களுக்கும் விடுதலைப்புலிகளும் சிந்திக்க வேண்டியுள்ளதே தவிர தமிழர் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும் என்ற அரசாங்கத்தின் சிந்தனைக்கே இடமில்லை.

(கொழும்பு)

பொதுத் தேர்தல் சமயத்தில் ஐ. தே. க. வின் உதவிக்காக வெவ்வேறு நிறுவனங்களாலும் தனி நபர்களாலும் ஐ. தே. க. செயலகம் ஊடாக வழங்கப்பட்ட 15 வாகனங்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி ஐ. தே. க. தலைமைப்பீடம் ஆராய்ந்து வருகிறது.

டொய்ட்டா, ஹைஏஸ், டொய்ட்டா டறசன், இசுசு, பஜீரோ இனங்களைச் சேர்ந்த இவ் வாகனங்கள் ஜனாதிபதி விஜேதுங்கவிற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன. அவை ஜனாதிபதியின் மிகவும் நெருங்கிய விசுவாசிகள் மூவரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன.

தேர்தல்காலத்தில் இவ்வாகனங்களை அவ் அதிகாரிகள் தமக்குநெருக்கமான உறவினர்களின் பெயரில் பதிவு செய்து கொண்டிருப்பதாக ஐ. தே. கவிற்கு இப்போது தெரிய வந்துள்ளதாம்,

அமைச்சராக விஜேதுங்க பதவி வகித்த காலத்திலும் பின்னர் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிகளை அவர் வகித்த போதும் இவர்கள் விஜேதுங்கவின் பெயரை பயன்படுத்தி பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

# ஹெய்ட்டி ராணுவ தலைமையகத்தை அமெரிக்க படைகள் சென்றடைந்தன

(வாஷிங்டன்)

ஹெய்ட்டியின், இராணுவத் தலைமையகத்தை அமெரிக்கப் படைகள் தம்வசம் கொண்டுவந்துள்ளன.

அமெரிக்கப் படைகள், தலைநகரில், தங்கள் பணியை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

பதவியிலிருந்து விலகியுள்ள ஹெய்ட்டியின் இராணுவ ஆட்சியாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுமாறும் அமெரிக்கா தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது.

## ஹெய்ட்டியில் உயிரிழப்பு கவலையைத் தருகிறது

ஹெய்ட்டியில் அமெரிக்க ஆக்கிரமிப்புகாரணமாக ஏற்படும் உயிரிழப்பு குறித்துதாம் பெரிதும் கவலை அடைவதாக அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், எனினும் அமெரிக்கப் படைகள் தமக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு தகுந்த பதிலடி கொடுப்பார்கள் எனவும், அது அவசியமானது எனவும் குறிப்பிட்டார்

அத்துடன் அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் ஏற்படும் வகையில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து ஹெய்ட்டி இராணுவ தலைவர்களுடன் ஒத்துழைப்பார்கள் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

## அமெரி. படை ஹெய்ட்டியில் அடுத்தஆண்டுவரை தங்கும்

(போட்ஒப்பிரின்சு)

அமெரிக்கப் படைகள் ஆகக் குறைந்தது அடுத்த ஆண்டின் முற்பகுதி வரையுமாவது ஹெய்ட்டியில் தங்கி இருப்பது அவசியமானதாகும். இவ்வாறு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் அந்த நாட்டில் நீதியான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுக்காவ தெரிவித்தார்.

கடந்ததிங்கட்கிழமையன்று ஹெய்ட்டியில் தரை இறங்கிய அமெரிக்கப் படையினர் சனிக்கிழமையன்று முதல் தடவையாக மோதலில் ஈடுபட்டது தெரிந்ததே.

ஹெய்ட்டியில் வடபகுதித் துறைமுக நகர பொலிஸ் நிலையம் ஒன்றுக்கு அருகே நடைபெற்ற இச்சம்பவத்தில் ஹெய்ட்டியர் பத்துப் பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை கஷ்டங்களை எதிர்பார்ப்பதாகவும், சனிக்கிழமைச் சம்பவம் போல மேலும் இடம்பெறலாம் எனவும் அவர் தொலைக்காட்சி சேவைக்கு கருத்து தெரிவிக்கும்போது குறிப்பிட்டார்.

## பங்களாதேசில் கடும்வரட்சி பெரும்உணவுத் தட்டுப்பாடு

பங்களாதேசில் நிலவும் கடும் வரட்சியினால் அங்கு நான்கு மாவட்டங்களில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இப்பகுதிகளுக்கு உடனடியாக சுற்றுப்பயணம் மேற்கொண்ட பிரதமர் பேகம் காலிதாஸியா மக்களுக்கு தேவையான வரட்சி நிவாரணப் பணிகளை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளை பணித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு யாழ் வட்டப் பொறுப்பாளர் செந்தமிழன் தலைமை வகித்தார். தொடர்ந்து நினைவுரைகளை வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திருக்குமரன், ஜோசப் பிரான்ஸிஸ் அடிகளார், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் ரதி, தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் நிகழ்த்தினர் இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பொதுமக்கள் உணர்வு ரீதியாகத் திரண்டு வந்து கலந்து கொண்டனர்.

### தென்மராட்சி

தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மணங்குணாப் பிள்ளையார் ஆலய முன்றலில் நிகழ்வுகள் மிகவும் சிறப்புற இடம்பெற்றன.

காலை 7மணிக்கு ஈகச்சுடர் ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. பொதுஸ்தாபனங்களின் உறுப்பினர்கள், கூட்டுறவாளர்கள், பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச ஊழியர்கள் என பலரும் உண்ணா நோன்பிலும், அஞ்சலி உரை நிகழ்விலும் கலந்து கொண்டனர் திலீபனின் வரலாற்றை சித்திரிக்கும்காவடி ஆட்டம், கும்மி, வில்லுப்பாட்டு, கவிதை, பேச்சு என்பன பாடசாலைகள் ரீதியாக இடம்பெற்றன. பின்னர் ஆசிரியர்கள், பொதுஸ்தாபனபிரதிநிதிகள், அதிபர்கள் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். மாலையாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, புலிகளின் குரல் பொறுப்பாளர், பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜீவா ஐயா ஆகியோர் உரையின் பின்னர் மாலை 4.30 மணியளவில் உண்ணாநோன்பு முடித்து வைக்கப்பட்டது

மாலை 5மணிக்கு நினைவு உரைகள் இடம் பெற்றன. தென்மராட்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. கலைவாணன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு வே. பால நடனம், நாட்டியம், கவிதை, பட்டிமன்றம், வில்லுப் பாட்டு மற்றும் கவிதைகள் என்பவை இடம்பெற்றன.

இப்பிரதான பந்தலை நோக்கி கரவெட்டி, உடுப்பிட்டி வட்டங்களிலிருந்து லெப். கேணல் திலீபனின் உருவப் படம் தாங்கிய நான்கு ஊர்திகள் வந்தன. கரவெட்டி வட்டத்தில் துன்னாலை மேற்கு மக்களினால் இரண்டு ஊர்திகளும் சண்டில்குளம் மக்களினால் ஒரு ஊர்தியும் எடுத்து வரப்பட்டன. இந்த ஊர்தியோடு பத்துக்கு மேற்பட்ட சிறுவர்களின் காவடியும் வந்தது. மேளதாள வாத்தியத்துடன் ஊர்திகள் காவடிகள் சகிதம் மக்களும் அணிதிரண்டு வந்தனர்.

உடுப்பிட்டி வட்டத்தில் உடுப்பிட்டி நாவலடி மக்களினால் ஒரு ஊர்தி எடுத்து வரப்பட்டது. ஊர்தி முன்பாக கரகம், காவடி என்பனவும் வந்தன. ஊர்திகள் அனைத்தும் மணவறைச் சோடனை கொண்ட சப்பறத்தில் திலீபனின் உருவப்படம் வைத்து சிறு உழவு இயந்திரங்கள் மூலம் எடுத்து வரப்பட்டன. மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு- பொன்தியாகம் சிறப்புரை ஆற்றினார்.

இறுதியாக நோன்பு மாலை 4-00 மணியளவில் நிறைவடைந்தது. விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு- தேவர் நோன்பிருந்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கி உண்ணா விரதத்தை முடித்து வைத்தார்.

இரவு 7-00 மணியளவில் கூட்டம் வடமராட்சி அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் திரு- தயா தலைமையில் ஆரம்பமானது. விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (யோ

யுத்தநிறுத்தம தல்களை தடுக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டதாகவும் இராணுவத்தினரின் தாக்குதல்களில் அச்சுவேலிப் பகுதியில் ஒரு பொதுமகன் மட்டுமே காயமடைந்ததாகவும் தெரிவித்தார்,

கடலரசனை தகர்த்தெறிந்த

# பெண்கடற்கரும்புலிகளுக்கு இன்றுநினைவுக்கல்நாட்டல்

கற்பிட்டிக் கடற்பரப்பில் கடந்த 19-ம் திகதியன்று சாகரவர்த்தனா (கடலரசன்) என்னும் போர்க் கப்பலைத் தகர்த்து வீர சாதனை படைத்த பெண் கடற் கரும் புலிகளான கடற் கரும்புலி லெப். கேணல் நளாயினி, (ஆறுமுகம் பத்மாவதி) ஊறணி, வல்வெட்டித்துறை, கடற்கரும்புலி மேஜர் மங்கை (கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி, முள்ளியான் தற்போதைய முகவரி பன்னாலை கரவெட்டி) ஆகியோரது திருஉருவப்படங்கள் இன்று காலை 9.00 மணிக்கு கடற்கரும்புலி மேஜர் மங்கையின் இல்லத்திலிருந்து சகல அணிவகுப்பு மரியாதையுடன் அவரது திருவுருவப்படம் எடுக்கப்பட்டு பின்னர் பருத்தித்துறை வீதியூடாக கடற்கரை வீதியை சென்றடைந்து கடற்கரை வீதி ஊடாக ஊறணி சென்று கடற் கரும் புலி லெப். கேணல் நளாயினியின் இல்லத்திலிருந்து சகல அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு வல்வெட்டித்துறை சென்றடைந்து அங்கு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும்.

தொடர்ந்து திருவுருவப் படங்கள் ஊர்தி பவனியாக உடுப்பிட்டிச் சந்தியை சென்றடைந்து பின்னர் அவ் வீதி வழியாக சலாம் வீதியூடாக பருத்தித்துறை வீதியை சென்றடைந்து பருத்தித்துறை வீதியூடாக நெல்லியடிச் சந்தியை சென்றடையும். பின்னர் வதிரிச் சந்தி, நவிண்டில் வீதியூடாக வடமராட்சிக் கோட்ட மாவீரர் துயிலும் இல்லம் சென்றடையும். அங்கு இறுதி இராணுவ மரியாதையுடன் நினைவுக் கல் நாட்டப்படும்.

## ஆசிரியர்கள் தேவை

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சங்கீதம், நடனம், சித்திரம், உடற்கல்வி ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு பட்டதாரிகள், க. பொ. த. (உ.த) சித்தியடைந்தோர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூபா 2500/- உம், க.பொ.த. (உ த) தராதரப்பத்திர ஆசிரியர்களுக்கு ரூபா 2000/- உம், மிகவும் கஷ்டப்பிரதேசங்களுக்கு நியமிக்கப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூபா 4000/- உம் மாத வேதனமாக வழங்கப்படும். விண்ணப்பங்களை 30-9-94 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக இல. 380 தமிழீழக் கல்விக்கழகம், நடுவப்பணியகம், பருத்தித்துறை வீதி, நல்லூர் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். விண்ணப்பத்தில் சேவையாற்ற விரும்பும் மாவட்டம், கற்பிக்க விரும்பும் பாடம் என்பனவற்றையும் குறிப்பிடல் வேண்டும்.

(9525)

## மரண அறிவித்தல்

### செல்வன் குகதாசன் பிரணவன்

[கடற்கரும்புலி கப்டன் லக்ஸ்மன்]

(பழைய மாணவன், யா- கனகரத்தினம் ம.ம.வி.)

குகதாசன் பிரணவன் அவர்கள் 19.9 1994 திங்கட்கிழமை வீரச்சாவடைந்து விட்டார். அன்னார் குகதாசன் (வேலை மேற்பார்வையாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்) சந்தானலட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சந்திரமாலா, ரஜனி, யா/ கனகரத்தினம் ம.ம வி. மாணவர்களான சுதர்ஜினி, சுதர்சன், தர்மளா, சர்மிளா ஆகியோ

# கடற்கரும்புலிகளுக்கும் மாவீரருக்கும் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கடந்த 19ஆம் திகதி கற்பிட்டி கடற்பரப்பில்சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'சாகரவர்த்தனா' என்னும் பாரிய யுத்தக் கபலை தகர்த்து மூழ்கடித்த கடற் கரும் புலிகளில் கப்டன் இசைவாணன் / லக்ஸ்மன் [குகதாசன் பிரணவன், முதலியார் ஒழுங்கை, நல்லூர் தெற்கு, அரியாலை], கப்டன் தூயமணி / வாமன் [சந்தசமிரவிநாயகம், கோயில் போரதீவு, மட்டக்களப்பு தற்காலிக முகவரி - செல்வபுரம், உரும்பிராய்] ஆகியோரது நினைவுருவப் படங்களும்,

நேற்று முன்தினம் வளலாய் சுதிரிப்பாய் ஊடாக முன்னேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினரை இடைமறித்து நண்பகல் 12 மணிவரை மோதி இழப்புக்களுடன் முகாமிற்கு திரும்ப வைத்த சமரில் வீரச்சாவைத் தழுவிய 2ஆம்லெப். செல்லக்குட்டி [திருநாவுக்கரசு ரஞ்சன் புளியங்கூடல், ஊர்காவற்றுறை தற்காலிக முகவரி கோண்டாவில்], வீரவேங்கை இலக்கியன் [பிலிப்பையா பாஸ்கரன் பெரியவிளான், பண்டத்தரிப்பு தற்காலிக முகவரி - அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்], வீரவேங்கை குபேந்திரன் [செல்லத்துரை செல்வரூபன் கொட்டியாவத்தை தற்காலிக முகவரி - அம்பாள் அகம், திருவீதி, உரும்பிராய்வடக்கு] வீரவேங்கை சொக்கன் [ஜெயராசா கஜேந்திரகுமார் சுழிபுரம் தற்காலிக முகவரி - தபாற்கந்தோரடி, மானிப்பாய்] ஆகியோரது வித்துடல்களும் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரவர் வீடுகளிலிருந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் யா / கனகரத்தினம் மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்படும்.

அங்கு இறுதி வீரவணக்க கூட்டம் நிறைவுற்றதும் மீண்டும் நினைவுருவப் படங்களும், வித்துடல்களும் அணிவகுப்பு மரியாதைகளுடன் நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி வழியாக கேணலகிட்டு பூங்காச் சந்தியை அடைந்து, பருத்தித்துறை வீதி வழியாக சட்டநாதர் கோவிலடியில் செல்லக்கிளி அம்மான் வீதியால் சங்கீதா வீதி, இராசபாதை வழியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை அடைந்து அங்கு சகல இறுதி இராணுவ மரியாதைகளுடனும் இரு கடற்கரும்புலிகளின்

### விடுதலைப்

சிங்கள அரசு திணறுகிறது இராணுவம் ஒரு புறம். அதிகாரம் இன்னொருபுறம் என்ற நிலை நிலவுகிறது. இவ்வாறு நுணாவிலில் நடைபெற்ற தியாகி லெப். கேணல் திலீபன் நினைவு கூட்டத்தில் சிறப்புரையாற்றிய பாலகுமாரன் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசுகையில்:

சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு தான் செய்யும் சில சலுகைகள் மக்களை திசை திருப்பக்கூடும் என நம்புகிறது பெரும் சுமைகளை சுமப்பவர்களிடமிருந்து ஒரு சில சுமைகளை எடுத்துவிட்டால் அவர்களை திசை திருப்பலாம் என்று அரசு எண்ணக்கூடும். இது தப்புக்கணக்கு என்பது காலப்போக்கில் தெரியும். நாம் அமைதிக்கு எதிராக பேசவில்லை ஆனால் தொடர்ந்து இன்று வரை தியாகி திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. எமது ஆரம்ப பிரச்சினையே மண்தான். எமது மண் எம்மிடமிருந்து பறிக்கப்பட்டே வருகிறது- இன்றைய சூழ்நிலையில் எமது போராட்டம் ஒருபுதியநிலையை அடைந்து விட்டது- இது ஒரு புதிய பரிணாமம்-

போராயினும் சரி, அமைதியானாலும் சரி தேசிய கௌரவத்தை இழக்காமல் தீர்வு காணக்கூடிய நிலை வந்துள்ளது- இது ஒரு புதிய காலகட்டம்- நாம் தெளிவாக இருக்கிறோம்- எமது தலைவர் தெளிவாகஇருக்கிறார்- தெளிவான முறையில் செயற்படக்கூடிய நிலையில் உள்ளோம்-

ஆனால் புதிய அரசு இராணுவம் சொல்வதைக் கேட்டு காலம் கழிக்குமானால் அதனால் தீங்கு ஏற்படப்போவது எமக்கல்ல சிங்களவர்க்குத் தான்- போர் செலவை இனியும் அவர்களால் தாங்க முடியாது- போர் நடத்த முடியாமல் அவர்கள் தவிக்கின்றனர். நாம் எமது போராட்ட பாதையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்- நாம் போர் புரிவது போரை நிறுத்துவதற்காகத்தான்- போர் என்பது எம் மீது திணிக்கப்பட்டது- நாம் எமது தற்காப்பு போரை நாம் தொடர்ந்து இதே நிலையில் நீடித்தால் போர் நிறுத்தப்படும்

இன்று போர்நிறுத்தம் என்றால் அவர்கள் அஞ்சுகின்றனர்- எதற்கு என்று எமக்கு தெரியாது-

# காமினிக்கு ஆதரவான பிரசாரத்தில் ஈடுபட விஜேதுங்கா மறுப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயகவுக்கு ஆதரவாக எந்த ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் கலந்து கொள்ளவோ உரையாற்றவோ போவதில்லை என ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்-

கட்சி உறுப்பினர்களுக்கு விடுத்துள்ள அறிவித்தலொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் உட்பூசல்கள் ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் எனவும் இது ஐ.தே.கவின் ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வாக்குகளைபெரிதும் பாதிக்கும் எனவும் அரசியல் அவதானிகள் கருத்துக் கூறியுள்ளனர்,

ஐ தே கவின் ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அடுத்த மாதம் 7.ம் திகதி ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது.

### அச்சுவேலி

வன.

இந் நடவடிக்கையில் 23 படையினர் காயமடைந்ததாகவும் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவதை தவிர்க்கவே ஜெயசந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் குலதுங்க தெரிவித்தார். படையினர் தமது நிலைகளுக்கு திரும்பிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இத் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட மூன்று படையினர் பலியாகியமை தெரிந்ததே.

### சிறிலங்கா

வான்பகுதிக்குமேலாகசென்று கொண்டு இருக்கையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது

இதில் பயணம்செய்த பிரதான விமான ஓட்டியும் உதவி விமான ஓட்டியும் மரணம் அடைந்துள்ளதாகதெரியவருகிறது இவ் விமானம் சிறிலங்கா விமானப்படைக்கு சொந்தமானது என ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன

நாளைய மாணவர் அரங்கில், க. பொ. த. [உ/த] 95-96 பிரிவுக் குரிய தூய கணிதம், பொருளியல், விலங்கியல் ஆகியபாடக்குறிப் புக்கள் வெளிவரும்.

### தெகிவளை

களும் வீடுகளும் சேதமடைந்துள்ளன- இதனைத்தொடர்ந்து அங்கிருந்து தப்பியோடிய ஆயுத குழுவினர் தெஹிவளை வீதி ஒன்றில் குண்டுகளை வெடிக்கச் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது- இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவ

நரம் காதர்க வில்லை-

### தமிழீழ

மை! நிச்சயம் தோல்வியடையும்'' இவ்வாறு திலீபன் உண்ணாநோன்பு ஏழாம் ஆண்டுஇறுதிநாள் நிகழ்வான நேற்று தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா நடேசன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

தியாகி திலீபனின் உயிர் பறிபோவதற்கு யார் காரணம்? எப்படி நடந்தது? என்பது உங்களுக்கு தெரியும்- வரலாறு நன்கு அறிந்தவர்களுக்கு இந்திய வல்லாதிக்கத்தின் சூழ்ச்சிப் பொறியே இதற்கு காரணமென்று புரியும்

அதுமாத்திரமல்ல எமது தேசத்தின் முழுமக்களையும் சோகத்தில் ஆழ்த்தக்கூடிய சம்பவங்கள் நடைபெறும் பொழுது, அந்த சம்பவங்களுடன் யார் தொடர்பென்று பார்த்தால் எமது வரலாற்று எதிரியான சிங்கள அரசை விட வரலாற்றில் நண்பனாக நடித்துக்கொண்டிருக்கும் இந்திய அரசு என்பதை உலகு நன்கு அறியும்-

இந்திய அரசின் இந்த அநாகரிகமான அரசியலும் காட்டுமிராண்டித்தனமான செயல்களும் எமது போராட்டத்துடன் அடிக்கடி நாங்கள் சந்திக்கும் நிகழ்வுகளாகும்.

உங்களுக்கு நன்றாகத்தெரியும் இந்திய அரசு எமது பிரதேசத்திற்கு என்ன நேர்ந்தத

நாட்டில் ஒலித்தால் அங்கேயும்தனியாட்சிக்காகபோராடுவார்கள். அதுமாத்திரமன்றி இந்திய சாம்ராச்சியத்திலுள்ள தேசிய இனங்களெல்லாம் விழிப்புணர்வு பெற்று தமது தேச விடுதலைக்கான குரலகொடுக்கும் என்ற ஐயப்பாடும் ஒருபுறம்.

இலங்கைத் தீவில் ஓர் உறுதியான ஒற்றையாட்சியின் கீழ் இந்திய நலனுக்கு பிரச்சினை அற்ற ஒரு அரசியல் நிலைப்பாடு ஓர் அரசியல் தன்மை இல்லாமல் போனால் தமது இந்திய நலனுக்கு குந்தகம் ஏற்படும் என்ற அச்சம் இந்தத் தீவில் ஒரு உறுதியான அரசியல் தன்மை இல்லாமல் போனால் மேற்குலக வல்லாதிக்கம் இந்த பிராந்தியத்தில் தலையிடும் என்ற அச்சம்,

இதன் காரணமாகவே கடந்த பதினொரு ஆண்டுகளாக இந்திய வல்லாதிக்கம் எமது போராட்டத்தில் தலையிட்டு பெரும் பெரும் தளபதிகளை அவர்களின் உயிர் இழப்புக்கு காரணமாக இருந்து வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இந்திய அரசானது ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இன்று உலகு மாறிவிட்டது. மாறிவரும் இந்த உலகத்தில் அமெரிக்க, ரஷ்ய வல்லாதிக்கங்களுக்கிடையேயான பனிப்போர் முடிவுக்கு

கப்படும் பொழுது, ஒடுக்கப்படும் பொழுது தங்கள் இனம் அழிக்கப்படும் பொழுது தான் அந்தப் புறச்சூழல் உருவாகும் போதுதான் ஆயுதப்போராட்டம் உருவாக வழிவகுக்கும்.

எமது தேசத்தை பொறுத்தமட்டில் எமது தாயகத்தை பொறுத்த மட்டில் இங்கே இலங்கை இராணுவம் ஆயிரக் கணக்கான எமது மக்களைத் தினமும் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது.

எமது பிரதேசம் காலம் காலமாக பாரம்பரியமாக நாம் இருந்து வந்த எமது பிரதேசம் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் ஆக்கிரமிக்கப்படுகின்றது.

ஆயிரக்கணக்கான எமது தமிழ் இளைஞர்கள் சிங்கள முகாம்களில் சித்திரவதைகளுக்குஉள்ளாக்கப்பட்டுவாடுகின்றனர். ஆனால் இந்தசூழ்நிலை தமிழ்நாட்டிலோஇந்தியாவின் வேறு எங்கிலுமோ இவ்வாறான ஆயுதம் தரித்த போராட்டத்திற்கான புறச்சூழல்கள் இல்லை என்பதை இந்தியா நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இதைவிட இந்தியா எவ்வாறு அற்பத்தனமான அரசியல் தீர்க்க தரிசனமான கண்ணோட்டம் இல்லாது எமது போராட்டத்தையும், எமது மக்களின் அபிலாசைகளையும் நசுக்குவது உண்மையில் உலக சமுதாயத்தால் மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகும்.

ஆகவே நான் இன்றைய

ரஜனி, யா/ கனகரத்தினம் ம.ம.வி. மாணவர்களான சுதர்ஜினி, சுதர்சன், தர்மளா, சர்மிளா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயேந்திரனின் அன்பு மைத்துனரும், நவரத்தினம், சந்திராதேவி ஆகியோரின் பாசமிகு பெறாமகனும், சூரியகுமார் - ரதிதேவி, வன்னியசிங்கம் (நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்) தேவமலர், நடேசலிங்கம் - ராஜினி, இராஜேஸ்வரி, குணரத்தினம் - நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், பரமசாமி இரத்தினம், சண்முகலிங்கம் நேசமணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகள் 27-09-1994 (இன்று) செவ்வாய்க்கிழமை பி.ப. 3-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

22, முதலியார் வீதி,
நல்லூர் தெற்கு,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
ப. குகதாசன்

(9523)

## 2-ம் லெப்: செல்லக்குட்டி
### (திருநாவுக்கரசு ரஞ்சன்)

2-ம் லெப். செல்லக்குட்டி (திருநாவுக்கரசு ரஞ்சன்) வீரச்சாவடைந்தார்.

இவர் புளியங் கூடலைச் சேர்ந்த திருநாவுக்கரசு ராசம்மா தம்பதியரின் அன்புப் புதல்வராவார், கலைமகள், ரதி, ரஞ்சி, மாலி, தர்மா, சுவீஸ் ஆகியோரின் சகோதரனும் யுவராசா (அம்பாள் சைவ உணவகம்) கிருஷ்ணகுமார் (இ.மி.ச. சுன்னாகம்) ஈசன் (நிரோஸ் களஞ்சியம் மணியந்தோட்டம்), ராசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27-9-94 இன்று காலை 10.00 மணிக்குகோண்டாவிலிலுள்ள அவரதுஇல்லத்திலிருந்து மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. யுவராசா
(மைத்துனர்)

இல. 181,
பலாலி வீதி,
கோண்டாவில்

(9524)

னர்- எதற்கு என்று எமக்கு தெரியாது-

இன்று எமது இனம் இந்த பேச்சுவார்த்தை என்பதை தெளிவாகத் தாண்டுமேயானால் எம் போராட்டம் புதிய வடிவத்தையடையும். இது ஒரு சோதனைகால கட்டம் அனைவரும் அரசியல் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டிய கட்டம்- நாம் இப்போது வித்தியாசமான பாதையில் போகிறோம் சண்டையும் நடக்கும் சமாதானப் பேச்சும் நடக்கும் அமைதியும் வரும் குழம்பும் பின் தொடரும்- இது ஒரு புதிய பாதை உலகில் கூர்மையடைந்த விடுதலைப் போர்களில் இப்படி நடப்பதுண்டு இவை படிப்படியாக இலக்கு நோக்கி நகரும்- எனவே புதிய சூழ்நிலையை நாம் தெளிவாக எதிர்கொள்ள வேண்டும்-

தாண்டிக்குளத்திலிருந்து சிமெந்தும், கம்பிக்கூடாகமின்சாரம் வருவதும் பொருளாதாரநோக்கம்அவை நடப்பது போல்நடக்கும்- அவற்றுக்கு யாரும் தடைபோடமுடியாது இவைஎல்லாம் அடிப்படைபிரச்சினையல்ல எனவேநாம்அவதியுறாது ஆறுதலாக எம் எதிர்காலத்தை எதிர்கொள்ளவேண்டும் என்றார்-

### தியாகி

தியாகி திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திகளும், தூக்கு காவடிகளும், கரகாட்டங்களும் எனப் பலவாறான கிராமிய கலை நிகழ்வுகள் குடாநாடெங்கும் நடைபெற்றன-

கோட்டை வடிவில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளும், தியாகி திலீபனின் புகழ்பெற்ற கோட்டைவாயில் பேச்சை ஒலிபரப்பிய வண்ணம் குடாநாட்டின் வீதிகளில் வலம்வந்தன-

னும் இரு கடற்கரும்புலிகளின் நினைவுக் கற்களும் நாட்டப்பட்டு, நான்கு மாவீரர்களது வித்துடல்களும் தூய விதை குழியில் விதைக்கப்படும்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### செவ்வாய் இரவு 1994-09-27

08.01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08.10 - தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7-ம் ஆண்டுநினைவாக நடைபெற்ற இறுதி நாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு
08 30 - செய்திகள்
08 40 - கருத்துக்களம்- இ.இராஜேஸ்வரன் எழுதி வழங்கும் ''தேவைகள்''
08 50 - களமும் கானமும்-மலர்விழி எழுதிய ''தளராத உறுதி''

### 1994 09.28 புதன் காலை

07 02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07 30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தேசத்திற்கு என்ன நேர்க்கத்தோடு வந்ததுஎன்று.

திலீபனின் உண்ணாவிரத நிகழ்வானது அகிம்சையின் பிறப்பிடம், தர்மத்தின் இருப்பிடம் என்று சொல்லும் இந்திய அரசின் முகமூடியை கிழித்தெறிந்து எமது மக்களின் நியாயமான போராட்டத்தை உலகிற்கு உணர்த்திய வரலறாகும்.

தியாகி திலீபனின் உண்ணாவிரத போராட்டமானது அர்ப்பணிப்பானது- எமது விடுதலை போராட்டத்தை பொறுத்தமட்டில் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருப்பு முனையாகும்,

இந்திய அரசின் அநாகரிகமான இந்த அடாவடித்தனங்கள் ஒன்று இரண்டல்ல-''

எமது இயக்கத்தின் தலைமைப் பீடத்தை படிப்படியாக அழித்து ஒழிப்பதன் மூலம் தனது பூகோள தேசிய நலன்களையும் தமது பிராந்திய வல்லாதிக்கத்தையும் வெல்லலாமென நினைக்கின்றது.

இந்தியாயதார்த்தத்திற்குஒவ்வாத அரசியல் தீர்க்க தரிசன மற்ற இந்தப் பார்வையினால் தான் எம்முடன் இவ்வாறு நடந்து கொள்கிறது.

வளர்ந்துவரும் எமது ஈழ விடுதலை போராட்டம் வெகு வேகமாக உலகமே வியக்கக் கூடிய நிலையில் இன்று வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது.

இந்த வளர்ச்சி தமிழீழத்தில் உறுதியான தமிழீழத் தேசியத்தை கட்டி எழுப்பும் என்ற அச்சமும், இந்த தமிழ்த் தேசிய உணர்வலைகளின் தாக்கங்கள் தமிழ்

பனிப்போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது,

இது மாத்திரமன்றி எந்த அமெரிக்க வல்லாதிக்கம் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் வரக்கூடாது என இந்தியா நினைத்ததோ அதே வல்லாதிக்கத்துடன் இந்திய அரசு ஏராளமான பொருளாதார உடன்படிக்கைகளை செய்துகொண்டுள்ளது.

அமெரிக்க இராணுவத்துடன் இந்திய இராணுவம் இந்துசமுத்திர பிரதேசத்தில் பல இராணுவ ஒத்திகைகளை கூட நடாத்திக் கொண்டிருக்கிறது.

இவை தவிர இந்தியாவின் முழு உள் சந்தையுமே இன்று அமெரிக்க வல்லாதிக்கத்திற்காக திறந்துவிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மேல்நாடுகளுடனான வெளியுறவுக் கொள்கை தலைகீழாக மாற்றப்பட்டிருக்கின்றது

ஆனால் தமிழீழ போராட்டத்தை பொறுத்தமட்டில் இந்தியா தனது கொள்கையைமாற்றவில்லை இதற்கு காரணம் இந்திய அரசுதான் சொல்லவேண்டும்

இந்தியா அச்சம் கொள்வதற்கு காரணம் ஆயுதம் தரித்த ஓர் விடுதலைப் போராட்டம் எந்த ஒரு நாட்டிலும் உருவாகும் பொழுது அதற்கான புறச் சூழல்கள் தேவை.

ஒருவர் நினைத்த மாத்திரத்தில்ஓர் ஆயுதப் போராட்டத்தை தொடக்க முடியாது. ஒருவர் நினைத்த மாத்திரத்தில் ஒரு தேசிய இனத்தை தனிநாடு பிரிந்து செல்வதற்கு அழைத்துச்செல்ல முடியாது.

ஒரு தேசிய இனம் அடக்

ஆகவே நான் இன்றைய இத்தினத்தில் இந்திய அரசைக் கேட்கின்றேன் உலகிலே பெரும் பெரும் வல்லாதிக்க அரசுகளெல்லாம் இன்று தமது பனிப்போர்களை முடித்துக் கொண்டு ஒன்று சேர்ந்து ஓர் ஒழுங்கான அரசியல் அமைப்பின் கீழ் செயல்படுகின்றன.

எவ்வளவோ காலமாக இருந்த எத்தனையோவிடுதலைப் போராட்டங்கள் எல்லாம் இன்று வெற்றி அடைந்து ஒவ்வொரு தேசிய இனமும் தன்னாட்சி உரிமையை நிலை நிறுத்தும் அளவிற்கு உலகம் வளர்ந்துகொண்டுவரும் இந்த வேளையிலே எமது போராட்டத்தில் குறுக்கிடாது உங்கள் கொள்கை அமெரிக்க வல்லாதிக்கத்துடன் எவ்வாறு தலைகிழாக மாற்றப்பட்டதோ அதேபோன்று எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்த வரையிலும் உங்கள் கொள்கையை மாற்றி எமது போராட்டத்தையும் எமது மக்களின் அபிலாசைகளையும் நீங்கள் அங்கீகரிக்க வேண்டும். நீங்கள் அங்கீகரிக்கும் பொழுதுதான் உங்கள் வெளியுறவுக் கொள்கை உண்மையில் வெற்றி அளிக்கும். அல்லாவிட்டால்இந்தியவெளியுறவுக் கொள்கை கட்டாயம் தோல்வி அடையும்.

ஆகவே இன்றைய இந்த வரலாற்று சிறப்பு மிக்க இந் நிகழ்வில் இந்திய அரசிடம் நாம்கேட்டுக்கொள்வதுஎமது போராட்டத்துடனானவெளியுறவு கொள்கையை உடனடியாக மாற்றி எம்மை அங்கீகரிக்க வேண்டும் என்பதே என்றார்.

### பிரபாகரன்

தமிழ் மக்களின் நெருக்குதல் காரணமா? என பி பி ஸி அறிவிப்பாளர் கார்ள் ஜோசப் கேட்டதற்கே ஆனந்தி மேற்கண்டவாறு பதிலளித்தார்-

யுத்தநிறுத்தம் சமாதானப் பேச்சுக்கு முன்பாக அவசியம் என பிரபாகரன் எனக்கு முன்னர் வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார். யுத்தநிறுத்தம் ஏற்படும் வரை இரு தரப்பும் மோதிக் கொள்ள வழி ஏற்படும்- போர் நிறுத்தத்தின் பின்பே சமாதானப் பேச்சில் அர்த்தமிருக்கும் என பிரபாகரன் வலியுறுத்துகிறார் எனவும் ஆனந்தி சூரியபிரகாசம் தனது பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி; 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது